Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 5.

6 - JUN 1931

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் ௪ | பிரசோற்பத்தி ஆண்டு வைகாசித் திங்கள்<br>1931 ௵ மேமீ | இதழ் ரு |

உள்ளுறை — பக்கம்

| | |
|---|---|
| சிறுத்தொண்டன் ... ... ... | கஉக |
| பண்டிதர் பேருரை ... ... ... | கஉங |
| சிவ வழிபாடு ... ... ... | கங0 |
| அறியாமை வினை ... ... ... | கஙக |
| நூல் கற்கப் புகும் முறை ... ... ... | கஙஉ |
| இருபதாம் நூற்றாண்டும் இந்தியாவின் வேட்கைகளும் | கஙங |
| தென்புலத்தார் ... ... ... | கஙஅ |
| சேந்தனார் ... ... ... | கசக |
| அறுபத்துமூவர் ... ... ... | கசச |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

# சமாஜ அறிக்கைகள்

1. திருநல்லூர்ப் பெருமணம் என்பது இப்போது ஆச்சாபுரம் என வழங்கப் படுகிறது. அது கொள்ளிடம் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கே நான்கு மைல் தூரத்திலுள்ளது. மணல்வழி. மாட்டுவண்டிகள்தான் கிடைக்கும். இந்த திவ்விய க்ஷேத்திரத்தில்தான் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகட்கு ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்தவுடன் ஆலயமே ஜோதிவடிவாக மாற, திருமணத்துக்கு வந்தோர் அனைவரும் ஜோதியினுள் இரண்டறக் கலந்தனர். திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும் தமது காதலியைக் கைப்பற்றி நமச்சிவாயப் பதிகத்தை ஓதிக்கொண்டு ஜோதியினுட்சென்று சிவசாயுச்சியபதவியடைந்தனர். இவ்வதிசயம் நடந்த நன்னாள் வைகாசி மூலமாகும். இவ்வாண்டில் வைகாசிமீ 20-ம் தேதி செவ்வாய்க்கிழமை யன்று (2-6-1931) இந்தத் திருநாள் வருகிறது. அன்றையதினம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தினர் திருநல்லூர்ப் பெருமணத்துக்கு யாத்திரையாகச் சென்று வைகாசி மூலத் திருநாளன்று திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திரம், தேவாரம் முதலியவைகளைப்பற்றி அரிய செந்தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி, விதிப்படி ஆலய வழிபாடு செய்து, திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் தேவாரம் சமாஜத்திய அடக்கவிலைச் சுத்தப் பதிப்பை சுவாமிகள் திருவடிக் காணிக்கையாக சமர்ப்பிப்பார்கள். 1931ளு ஜூலைமீ 15உ முதல் வெளியூர்கட்குத் தபால் மூலமும் ரயில்வே மூலமும் புத்தகங்கள் விற்பனைக்கு அனுப்பப்படும். அதுவரை அனுப்பப்படமாட்டா.

2. கூவம் என வழங்கும் திருவிற்கோலத்தில் சென்ற ஆண்டில் நம் சமாஜத்தினர் சைவ சித்தாந்தசபை யொன்றைத் தொடங்கினார்கள். இவ்வாண்டில் அச்சபை சமாஜத்தோடு இணைக்கப்பட்டது. ஆண்டுவிழா 1931ளு ஏப்ரில்மீ 26, 27 தேதிகளில் மிகச் சிறப்பாக திரு. ச. வை. துரைசுவாமி முதலியார் பி. ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் கி. குப்புசாமி முதலியார், திரு. வி. உலகநாத முதலியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை அ. சோமசுந்தரம் செட்டியார் ஆகிய அன்பர்கள் முறையே "திரிபுர சம்ஹாரம்" "சைவர்களின் கடமை," "சைவசமயம்," "சமய குரவர் நால்வர்" என்ற பொருள்கள் பற்றிப் பேசினார்கள். கூவத்தைச் சார்ந்த வேறு பல அன்பர்களும் மாணவர்களும் அரிய செந்தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்,

3. திருவாசகம் நுண்மைபயில் கழகத்தின் ஒன்பதாவது கூட்டம் 1931ளு ஏப்ரில்மீ 12உ ஞாயிற்றுக்கிழமைகாலை 8½ மணிக்கு, சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஹைஸ்கூல்ஹாலில் நடந்தது. திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை எம். ஏ. பி. எல். அவர்கள் போற்றித் திருஅகவலை மிகச் செவ்வையாக விளக்கினார்கள். கோடை விடுமுறைக்காக இக்கழகத்தின் கூட்டங்கள் மூன்றுமாதம்வரை நிறுத்தப்பட்டன. அடுத்த கூட்டம் 1931ளு ஜூலைமீ 26உ ஞாயிற்றுக்கிழமை காலை 8½ மணிக்குச் சமாஜக் காரியாலயத்திலேயே நடைபெறும்.

4. சமாஜ சொற்பொழிவாளர் :— திரு. E. S. கண்ணபிரான்வேள் அவர்கள் 1-2-1931 முதல் 30-4-1931 வரையில் சான்றளிக்கு முறையில் (on probation) சமாஜ சொற்பொழிவாளராக நியமிக்கப்பட்டிருந்தார். மீண்டும் அவர் நியமிக்கப்படவில்லையாகையால் சமாஜத்தின் சார்பாக 1-5-31 முதல் எவ்வகையான தொண்டும் இயற்றும் உரிமையை அவருக்குச் சமாஜத்தினர் கொடுக்கவில்லையென்பதை இவ்வறிக்கையின் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை, 10-5-1931.

இங்ஙனம் :
ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

---

## மதிப்புரை

**தேவி தோத்திர மஞ்சரி** :—இந்நூல் திரு. வி. உலகநாத முதலியார் அவர்களால் திரட்டப்பட்டது. பலதல புராணங்களிலுள்ள சத்தி வணக்கப் பாக்களையும் ஒருங்கு சேர்த்துத் தருவதோடு, அபிராமியந்தாதி, மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ், சௌந்தரிய லகரி முதலிய அரியநூல்களிலுள்ள முக்கியமான பாடல்களையும் கொண்டுள்ளது. திருக்கோயில் வழிபாடு செய்பவர்கட்கும், சத்தி பூஜை புரிவோருக்கும் இன்றியமையாது வேண்டப்படும் நூல் இதுவே. விலை அணா நான்கு. வேண்டுவோர் முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

| மலர் ச | பிரசோற்பத்தி ஆண்டு வைகாசித் திங்கள் 1931 ௵ மேமீ | இதழ் ரு |
| --- | --- | --- |

## சிறுத்தொண்டர்

[பத்திராசிரியர்]

சென்னை உயர்தர நீதிமன்றத்தி லுள்ள எழுத்தாளர்கள் (Clerks) ஒரு நாடகசபை வைத்திருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் "சிறுத்தொண்டர்" என்ற நாடகத்தை மிக்க விமரிசையாக நடத்தினார்கள். அதைப் பார்ப்பதற்காக என்னை அழைத்திருந்தார்கள், நான் சென்றிருந்தேன். என் பக்கத்தில் ரிஜிஸ்திரார் என்ற வலியமேலெழுத்தாளர் உட்கார்ந்திருந்தார். அவர் ஐரோப்பியர். அவர் இப்போது ஜில்லா நீதிபதியாகவிருக்கிறார். சிறுத்தொண்டர் சீராளனை அரியும் காட்சியை அவர் கண்டார். உடனே என்னை நோக்கி "என்ன! உங்கள் தெய்வீகம் பொருந்திய சமயம் மனுஷ்ய உயிருக்கு இவ்வளவு மதிப்புதானா கொடுத்திருக்கிறது? முகமறியாத ஒரு குண்டன் பிச்சைக்கு வந்து பிள்ளைக்கறிகேட்க, உடனே சிறுத்தொண்டர் தமது ஒரே பிள்ளையை அரிந்து தருகிறாரே. இது மக்களறிவுக்கும் அறவுணர்ச்சிக்கும் எவ்வாறு பொருந்தும்?" *என்று கேட்டார். இத்தகைய கேள்வியை நமது சமயத்தினர் என்று பெயரளவில் நிற்கும் சில இளையசகோதரர்களும் கேட்கிறார்கள். ஆகையால் எனக்கும் அந்த ஐரோப்பிய ரிஜிஸ்திராருக்கும் நடந்த சம்பாஷணையின் சுருக்கத்தை வெளியிடுவது அநுகூலமாயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

---

* "How is it that human life is so cheap in your divine religion. It is revolting to common sense and morality that a man should kill his only son to feed an able bodied beggar and a perfect stranger who asks for his life."

'ஐரோப்பியப்பெரும்போரில்நான்கு ஆண்டுகளில் எத்தனை லக்ஷம் உயிர்கள் இங்கிலாந்தின் சார்பாக மடிந்தன' என்று அவரைக் கேட்டேன். அவர் ஏதோ ஒரு கணக்கைச் சொன்னார். பிறகு 'இத்தனை லக்ஷம்பேரையும் இங்கிலாந்து எதற்காகப் பலிகொடுத்தது' என்று வினவினேன். [illegible]து தற்பாதுகாப்புக்காகவும் தன[illegible] ஆதிக்கத்துக்கு ஒரு சிறிதும் பங்கம் வாராது முன் எச்சரிக்கையாகச் சண்டையிட்டதற்கும் இப்பலிநேர்ந்தது அவசியமாயிற்று" என்றார்.

'இங்கிலாந்து தனது ஆதிக்கத்தைப் பாதுகாப்பதால் என்ன பலனை யடைந்தது' என்று கேட்டேன். அதற்கு அவர் சிரித்துக்கொண்டே "நன்று, நன்று, அவ்வாதிக்கம் இன்றேல் நான் இங்குவர இயலாமற் போயிருக்கும்" (Well but for that I wouldn't be out here) என்றார். 'ஆகையால் தன்னுடைய மக்களுக்குப் பல வழிகளிலும் இனி வருங்காலத்தில் நிலைத்த பலன்களைத் தருவதை முன்னிட்டு அக்காலத்தில் அப்போரில் அத்தனை லக்ஷம் பேர்களைப் பலியிடுவதற்கு உங்கள் தேசம் துணிந்ததல்லவா' என்று அவரைக் கேட்டேன். "நன்று, நன்று பலனைக் கருதியவிடத்து அந்தப்பலி பெறுமானதே" (Well, the sacrifice is worth it, considering the result achieved) என்றார். 'சிறுத்தொண்டர் கதையிலும் இதே பதில் தான் உண்மையை விளக்கும் பதிலாகும்' என்றேன். "அதெப்படி அதெப்படி" என்று வியப்புடன் கேட்டார்.

"உங்கள் மேல்நாட்டு நாகரிகம் புறப்பொருள்களின்மேல் நிரம்பிய பற்றை வளர்ப்பது. அப்பற்றின் வளர்ச்சிக்குத் தடையாக எத்தேசத்தவரேனும் நின்றால் உடனே அவர்களோடு சண்டையிடுவது உங்கள் இயல்பு. ஐரோப்பியப் பெரும்போரை உற்று நோக்குங்கள். ஜெர்மனி தேசத்தார் உங்கள் ஆதிக்கத்துக் கிடையூறாக இருக்கிறார்கள் என்றல்லவா நீங்கள் சண்டையில் நுழைந்தீர்கள். உங்கள் தேசங்கொண்டுள்ள புறப்பொருள் பற்றைக் காப்பாற்றுவதற்காகவே லக்ஷக்கணக்கான போர்வீரர்களைப் பலி கொடுத்தீர்கள். அத்தனை லக்ஷம் உயிர்களைவிட உங்கள் ஆதிக்கம் மேம்பட்டது என்று கருதினீர்கள். அந்த வேளையில் சில லக்ஷம் உயிர்கள் போனாலும்பின்வரும் பல நூற்றாண்டுகளிற் றோன்றும் கோடிக்கணக்கான உங்கள் நாட்டு மக்கள் நிலைத்த இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்று கருதியல்லவா அவ்வாறு பலிகொடுத்து உங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தினீர்கள். எங்கள் நாகரிகத்தைப் பற்றிச் சிறிது கூறுகிறேன் கேளுங்கள். எங்கள் சமயம் புறப்பற்றுக்களைப் பாராட்டுவதல்ல. அப்பற்று வளர்ச்சிக்காகச் செய்யும் பலியை எங்கள் சமயம் எப்போதும் போற்றுவதில்லை; மிக்க இழிவாகவே கருதும். சிறுத்தொண்டர், வந்த பிச்சைக்காரனை வெறுமிடியன் குண்டன் என்று எண்ணவில்லை. சிவனடியாரைச் சிவமெனக் காணும் முறைகொண்டு சிவமாகவே கண்டார். சிவம் கொடுக்கக் கிடைத்த உடலை மீண்டும் சிவனுக்கு அர்ப்பணம் செய்வதில் ஒன்றும் தவறில்லையென்றுணர்ந்தார். தன்னுடைய ஒரேபிள்ளையென்ற ஆசாபாசத்தை வளர்ப்பது சமய ஒழுக்கமாகாது. யான் எனது என்ற பற்றையறுத்தலே வீடு என்று எங்கள்சமயம் கூறுகின்றது. தனது பிள்ளையைச் சிவனடியாருக்குக் கொடுப்பதால் பிள்ளைக்கும் நற்கதி கிடைக்கும் தனக்கும்வீடுபேறுண்டு என்றறிந்தார். ஆனால் தனக்குவீடுபேறு கிடைக்கவேண்டுமென்ற சுயநலங் கருதினாரல்லர். சிவனடியார் உருவங்கொண்ட சிவனுக்குச் சிவன் தந்த சொத்தைத் திருப்பிக் கொடுப்பதைத் தவிர வேறு நியாயமான வழி ஒன்றுமில்லையென்றுணர்ந்து, அதைத் தனது ஒரு கடமையாகவே நினைந்து பிள்ளையைச் சமர்ப்பித்தார்.

"தங்கள் எல்லைக்குள் நுழையாமல் நூறுகாதத்துக்குப் புறம்பேயிருக்கும் எதிரியோடுபோர்புரிந்து தங்கள் ஆதிக்கத்தையும் புறப் பொருட்பற்றையும் பாதுகாக்கு நிமித்தம் லக்ஷக் கணக்கான உயிர்களைப் பலிகொடுத்த தங்கள் நாட்டுநாகரிகச் செயலைவிடத் தன்னெதிர் நின்ற கடவுளுக்கு அக்கடவுள் தந்தபிள்ளையென்ற பொருளைத் திருப்பிக்கொடுத்துத் தன்னுயிர்க்கும் தன் பிள்ளையுயிர்க்கும் நிலைத்த பேரின்பத்தைச்சம்பாதித்துக் கொண்ட சிறுத்தொண்டர்செயல் எவ்வகையில் தாழ்ந்தது?" என்று விரிவாகக் கூறி அவரைக் கேட்டேன். "நன்று, நன்று, உன்னுடையவாதத்தை நான் பாராட்டுகிறேன், வந்தனம்" (Well, I appreciate ycur point of view, thank you)என்று சொல்லிக்கொண்டே, ஆட்டமும் முடிந்தபடியால் அவர் எழுந்து சென்றார். இந்த சம்பாஷணையை நமது நண்பர்கள் நன்றாகச்சிந்தித்துப்பெருக்கிப் பயன் படுத்திக் கொள்ளு மாறு வேண்டுகிறோம்.



---

# பண்டிதர் பேருரை

[இது, திருநெல்வேலிபேட்டை திருஞானசம்பந்தர் திருவருட்கழக நான்காவதாண்டு நிறைவிழாவில் தலைமை வகித்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அவர்கள் நிகழ்த்திய முன்னுரையின் குறிப்பாகும்.]

"ஆனைமுக னறுமுக னம்பிகைபொன் னம்
ஞானகுரு வாணிபத நாடு" [பலவன்

இப்பெரியார் சபைக்குத் தலைமை வகித்து அதனை நடாத்துதற்குரிய அறிவின் மதுகை அற்பமுமில்லாத "அடியார்க்கு மடியேன்" பெரியார் ஆஞ்ஞையை மறுத்துரைப்பின் அது "மூத்தோர் சொன்னவார்த்தை யமிர்தம்" என்னுந் தெய்வப்புலமை ஔவைப்பெரியார் திருவாக்கிற்கெதிர் வாக்காய் முடிந்து பழிபாவங்கட்காளாகவேண்டுமென் றஞ்சியே அதற்கு உடன்பட்டேன் என்று கடைப்பிடித் தருண்மின் கலைவல்லீர். அது நிற்க,

சைவப்பிரசங்கம், ஏனைப்பிரசங்கம் போலாது முடிந்த பெரும்பேறாகிய வீட் டின்பத்திற்குக் காரணமாகிய உபதேசவியல்பிற்றென்பதனை யாவர்க்கும் அறிவுறுத்தற்கன்றே கைலையங் கிரியிலே கல்லாலவிருக்கப்பந்தர் நீழற் கண் சனகரை யுள்ளிட்ட அதிமேதாவியாகிய சபையாருக்கு உண்மையுபதேச முறையில், ஸ்ரீ கண்டசரீரசரீரியாகிய சிவபிரான் தக்ஷிணாமூர்த்தியாகி அக்கிராசனாதிபதியாகத் திவ்வியாசனத்தி னெழுந்தருளியிருந்து சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் நான்கையும் அறிவுறுத்தருளினார். ஆகலான், தக்ஷிணாமூர்த்தி என்றுள்ளாரோ அன்றே சைவப் பி

சங்கமும் அதற்குரிய சபையும்தலைமை வகித்த லுத்தியோகமும் உண்டென்பதை நன்குணர்ந்து, நம்மவர், பாதிரிமார் பிரசங்கஞ் செய்தலைக் கண்டு சைவரும் பிரசங்கஞ்செய்யத் தலைப்பட்டார் என்று சொல்லுஞ்சொல்லை இற்றைப்பகல் தொடங்கி முற்றத் துறந்து உண்மை கடைப்பிடித்து நன்மையடைதல் வேண்டும்.

இன்னும், காமிகாகமத்திலே சைவ போதகத்தின் பொருட்டு ஆலயங்கள் தோறும் பிரசங்கமண்டபம் கட்டப்படல்வேண்டும் என்றும், அவற்றிலே தரிசனத்தின் பொருட்டு வரும் அடியார் கேட்டு உய்யும் வண்ணம் சைவ போதகம் செய்தல் வேண்டுமென்றும் கூறப்பட்டிருத்தலை இன்னுங் கண்டுகளிக்கலாம். இதனாலும் சைவப் பிரசங்கஞ் செய்தல் சைவசமயிகளுக்கு ஆதி தொடங்கி யுளதாகிய மிகு விசேட புண்ணியச் செயலாமென்பதை நன்குணர்க.

இன்னும் பிரமோத்தர காண்டத்திலே, திருக்கோகரணத்திலே சிவாலயத்திலே, ஒரு விசேட தினத்திலே சைவபோதக மண்டபத்திலே, ஓராசிரியர் போதித்துக் கொண்டிருந்தார் என்றும், தரிசனத்தின் பொருட்டு அங்குவந்த பரத்தை ஒருத்தி அவர் போதனையைக் கேட்டுப் பரத்தைமை பாவமென்றும் அதனால்நரகப் பிராப்தியெய்துமென்றும் உணர்ந்து அன்று தொட்டுப் பரத்தைமையைப் பாற்றி உலகவியல்பைத் துறந்து சிவத்தைப் பற்றி நின்று வீடு பெற்றாளென்றும் கூறப்படுதலானும் சைவப் பிரசங்கம் சைவசமயம் எப்போதுண்டோ அப்போதுண்டென்பதுதானே போதருமென்க.

இனி, சைவசபைக்கு ஆதியில் அக்கிராசனாதிபதி தக்கிண மூர்த்தியேயாம் என்பதை மேலே கூறினும். பின்னர்ச் சந்தானமுறைக்கண் திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர், மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியர் என்னும் இவர்களும் அவ்வாறிருந்தார்கள். இவர் பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனபதிகளும் தருமபுர ஆதீனபதிகளும் அக்கிராசனபதிகளாக இன்றுவரை இருத்தலானும் சைவப்பிரசங்கம் எல்லாப் பிரசங்கங்கட்கும் முந்திய தென்பதை மொழியவும் வேண்டுமா? நிற்க.

இனி, சைவசமயிகளாகிய எம்மனோர்க்கு "எம்மதமுஞ் சம்மதமேயாம்" என்னை? எமதிறைவனாகிய சிவபெருமானே ஆன்மாக்கள் கன்மங்களுக்கீடாகச் சோபான முறையினின்று அவற்றை யநுபவித்துத் தொலைத்துச் சைவத்தில் வந்து முத்தியடைதற்கு எல்லாச் சமயங்களையும் உண்டாக்கிய கருத்தன் ஆகலான். நாமும் பலபிறப்புக்களிலே இச்சோபான மார்க்கங்களினின்று அவ்வவற்றை யுறுதியாகக் கொண்டு அநுஷ்டித்துவந்த பலத்தினாற்றான் சைவத்தில் வந்திருக்கின்றோம். ஆதலால், நாம் சைவத்தில் வந்துவிட்டோம் என்றெண்ணி மற்ற மதங்களை அழிக்கப்புகுந்தால் அழிக்கப்படாமை மாத்திரையே யன்றி, அவற்றை யுண்டாக்கிய எமதிறைவன் கருத்திற்கு மாறுபட்டவர்களாய் அவனால் தண்டனையும் அடைவோம் என்பது தப்பாது.

"தோல்வியும் வெற்றியுந் தொன்மதங் கட்
காலபே தத்தினுண் டேந்தீபற [கெலாங்
கருத்தன் செயலதென் றுந்தீபற"



"வாதிக டங்களுக் கல்லால் வலியின்மை
ஓதார் மதங்களுக் குந்தீபற"

என்பன ஈண்டே நோக்கற்பாலன.

அங்ஙனமாயின் எல்லா மதங்களும் சமமாவனவோவெனின், ஆகா. என்னை? பல வேறு வகைப்பட்ட சமயங்களும் அவ்வச்சமயப்பொருள்களும் ஒன்றோடொன்று மாறுபட்டுக் கிடத்தலின் எது சரி எது பிழையென்றாராயப் புகின், இதுசரி அதுபிழை என்று கூறி ஒன்றையேனுந் தள்ளிவிடாமல், எல்லாவற்றையும் உடன் படுத்தித் தனக்கு அங்கமாகக்கொண்டு, தான் அங்கியாய் நிற்கும் சமயம் எதுவோ அதுவே முடிந்த பேறாகிய பிறந்திறவாப் பெருவாழ்வாகிய பேரின்பந் தரும் சிறந்த மதமாகும். அது சைவ சமயமே யென்றுணர்க. மேலே போந்த கருத்துப்பற்றி யன்றே,

"புறச்சமய நெறி நின்றும்" "ஓது சமயங்கள்" என்ற பாடல்கள் சிவஞானசித்தியிற் கூறப் பட்டதூஉமென்க.

கிறிஸ்துமத முதலிய பல மதங்கள் ஏசுக்கிறிஸ்து முதலியோரால் உண்டாக்கப்பட்டனவென்று அவ்வம்மத நூல்களிலே கூறப்பட்டனவாக, அவற்றைச் சிவபிரானே உண்டாக்கினானென்றல் சாலாதாம் பிறவெனின் அற்றன்று. அது சாலுமாறு கூறுதும் :—

வேதாகமங்களே முதனூல்கள் எனவும், அவற்றிலே எல்லா மதங்களும் எல்லாப் பொருள்களும் சூக்கும தூலமாகக் கூறப்பட்டனவென்றும், ஒவ்வொரு காலவிசேடத்திலே ஒவ்வொரு கன்மவிசேடம் பற்றி ஒவ்வோர் ஆன்மாச் சிவபிரானருளால் அவ்வேதாகமங்களிலே 'சமுத்திரகலச நியாயம்' பற்றித் தாமறிந்தவளவில் ஒவ்வொரு பொருளை எடுத்துக்கொண்டு "தர்க்க உத்தரங்களினால்" ஒவ்வொரு மதஞ்செய்துதான் தான்செய்தமதமேமெய்ச் சமயமென்று சாதியாநிற்கும். ஆகலான், அவனருளினாற் செய்த நூலும் அவன்செய்த நூலேயாம். அவனருளின்றேல் அவ்வான்மாக்கள் செய்ய வல்லுநராகார் என்க. இக்கருத்துப் பற்றியன்றே,

"அருமறையா கமமுதனூ
லனைத்து முரைக் கையினா
னளப்பரிதா மப்பொருளை
யானருளா லணுக்க
டருவர்கள்பின் றனித்தனியே
தாமறிந்த வளவிற்
றர்க்கமொடுத் தரங்களினாற்
சமயஞ் சாதித்து
மிருதிபுரா ணங்கலைகள்
மற்று மெல்லா
மெய்ந்நூலின் வழிபுடையா
மங்கம்வே தாங்கஞ்
சுருதிசிவா கமமொழியச்
சொல்லுவதொன் றில்லை
சொல்லுவார் தமக்கறையோ
சொல்லொணாதே"

எனவும்,

"வேதநூல் சைவநூலென்
றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின்
விரிந்த நூல்கள்"

எனவும்,

போந்த பிரமாணங்கள் சிவஞான சித்தியுளெழுந்ததூஉமென்க. இங்கே கூறப்பட்ட வேதாகமங்கள் யாவையென அறிஞர் உற்றுநோக்கி உண்மை கடைப்பிடிக்க. சங்க காலத்தையும் சகலாகம பண்டிதர் காலத்தையும் அளந்தறிக.

இன்னும் அவாந்தரசிருட்டியாரம்ப காலத்திலே ஆன்மாக்கள்மீது முகிழ்த்த பெருங் கருணையாலே சிவபிரான்

அருளிச்செய்த வேதாகமங் களிலே சூக்குமமாகச் சொல்லப்பட்டபுறமதங் களையே பிற்காலத்து ஒவ்வோரான்மா வேறு பிரித்தெடுத்துக்கொண்டுசொன்னபடியால் முதற்கண் சொன்னவரே அதற்குக் கருத்தர் என்பதும் ஒரு பொருள்.

சமணக்கடவுள் புத்தக்கடவுள்செய்ததென்று அவ்வச்சமயத்தார் கூறும் சமண நூல் புத்த நூல்கள் வேதாகமத்திற் சுருக்கிக் கூறப்பட்டமை நோக்கியன்றே சிவபிரான் அவற்றைச் செய்தனரென்று திருஞான சம்பந்தப் பிள்ளையார்,

"இணையில் விரும்பூ ளையிடங்
கொண்ட வீசன்
அணைவில் சமண்சாக் கியமாக்
கியவாறே"

எனவும், அப்பர் சுவாமிகள்,

"பரிதி யானைப்பல் வேறு சமயங்கள்
கருதி யானை"

எனவும்,

"விரிவிலா அறிவி னார்கள்
வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்"

எனவும் ஓதியருளியதூஉ மென்க.

"தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூ லெனத் தெரிந்து நாட்டுவித்து"

என்றருளிச் செய்த குமரகுருபர சுவாமிகள் கருத்துமதுவே. ஈண்டு தொன்னூற் பரசமயம் என்றது பண்டு தொட்டுப் பயின்றுவரும் வேதாகமங்களிற் கூறப்பட்ட புறச்சமயம்.

எல்லாச் சமயங்களையும் உண்டாக்கிய கருத்தாவுக்கு அவ்வச் சமயப் பற்று வைத்து, அவ்வச் சமயநூல் விதிப்படி ஒழுகுபவர்க்கு அததற்கேற்ற பயன் கொடுத்தலும் இன்றியமையாத கடப்பாடாதலினன்றே,

"யாதொரு தெய்வங் கொண்டி
ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்"

எனச் சித்தியுட் கூறப்பட்டதூஉ மென்க.

இக்கருத்துப் பற்றியே பிறரும்,

"எவ்வெவர் தம்மையேனும்
யாவரே யெனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே
யவர்க்கருள் தருவாய் போற்றி"

எனக் கூறியதூஉ மென்க.

அங்ஙனமாயின் கிறிஸ்து முதலிய புறச்சமயத் தெய்வங்களைச் சைவராகிய யாமும் வணங்கிப் பலனடையலாந்தானே யெனின், அறியாது கூறினாய். என்னைகொல்? அறியாமை யெனிற் கூறுதும்:—

புறச்சமயத்தெய்வங்களை இடமாகக் கொண்டு சிவபெருமான் அவர்களுக்குப் பலனளிப்பர் என்பதைச் சைவர்களாகிய யாமெல்லோரும் அறிவோம். அன்னோர் அதனை யறியாது அவ்வத் தெய்வங்களே பயனளிப்பன வென்னும் உறுதிப்பாடுடையர்; ஆகலான், அவர்கட்கு அவ்வழிபாட்டுக் கிசைந்த பலனைச் சிவபிரான் தப்பாது அளிப்பர். அவ்வத் தெய்வங்களிடமாகநின்று சிவபிரானே பயனளிப்பர் என்ற உண்மையுணர்ந்த சைவ சமயிகளாகிய யாம் அவரை நேரே வழிபடல் வேண்டும். அவ்வாறு செய்தாற்றான் எமக்குப் பலனளிப்பர், அவ்வாறு செய்யாது பிற தெய்வத்தை வழிபடின்பயனளிப்பானல்லன் பரமசிவன். அதனை,

"காண்பவன் சிவனே யாகில்
அவனடிக் கன்பு செய்கை
மாண்பற மவன்றன் பாத மறந்து
செய் யறங்க ளெல்லாம்
வீண்செய லிறைவன் சொன்ன
விதியறம் விருப்பொன் றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும்
பூசனை புரிந்து கொள்ளே."

என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானறிக. இவ்வுண்மை உணராமையே அறியாமை என்க. "காண்பவன் சிவனேயாகில்" என்னும் பகுதியும் எல்லாத் தெய்வங்களையும் இடமாக் கொண்டு சிவபிரானே பயனளிப்பன் என்பதை உணர்த்துமாறு நோக்கற்பாலது.

அப்பரும் இக்கருத்துப்பற்றியே,

"என்றும்நாம் யாவர்க்கும்
இடைவோ மல்லோம்
இருநிலத்தி லெமக்
கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ்
சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் திருவடியே
சேரப் பெற்றோம்"

என்றருளிச் செய்தவாறுங் காண்க.

இவை இவ்வாற்றான் ஒக்கு மன்றாயினும் சம்பந்தப் பிள்ளையார் சமண சமயத்தை அழித்தார் எனக் கூறப்படுதல் மேற்கூறியதனோடு மாறுகோளாம் பிறவெனின் அன்று. என்னை? பிள்ளையார்,

சமண சமயத்தையும் சிவபிரானே உண்டாக்கினபடியால் அதனை அழித்தல் தம்மாலும் இயலாதென்பதனை நன்குணர்ந்து மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் சமணரை வெல்ல எழுந்தருளுகவென வேண்டிய போது, திருக்கோயிலினுட் போந்து சோமசுந்தரப் பெருமான்சந்நிதிபுக்கு,

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே"

என வேண்டி அவரருள் பெற்றுச் சென்று வெற்றிகொண்டு அப்பாண்டி மண்டலத்தில் அச்சமயம் இல்லையாகச் செய்ததன்றி மற்றைய இடங்களில் இருந்தது என்பது திருவோத்தூரில் ஒரு அடியவர்சிவபிரானுக்கு உண்டாக்கிய பனைகள் யாவும் ஆண்பனைகளாய்க் காயாதொழியச் சமணர்கள் அவ்வடியாரைப் பரிகாசஞ் செய்தனர் என்பதனாலும், திருமயிலாப்பூரில் சம்பந்தப் பிள்ளையார் என்பைப் பெண்ணாக்கிய காலத்து அநேக சமண புத்தர் வந்து பார்த்து ஆச்சரியமடைந் தேகினர் என்பதனாலும் நன்றாக அறியலாம். சிவாஞ்ஞையெதுவரை சமணசமயத்தை அழித்தற்குண்டோ அதுவரைதான் அது செய்தார் பிள்ளையாராகலான் சிவாஞ்ஞையாற் செய்தது சிவச் செயலேயாம். ஆதலின் மேற்கூறியதனோடு முரணாமை நன்குணர்க.

சமணரை மதுரையில் வாதில்வென்றது மேற்காட்டிய காட்டுக்களால்சிவச் செயலே யென்பதுணர்ந்து முன்னொடு பின் முரணாமை தேறினேன். திருத்தெளிச் சேரியில் புத்தரை வாதில் வென்றகாலத்துச் சிவாஞ்ஞையின்றியும் வெற்றி நிகழ்ந்தமையின், சிவபிரான் செய்த மதத்தைப் பசுக்கள் அழிக்க வல்லுநர் என்பது பெறப்படுதலால் அது முன்னொடுபின் முரணும் போலுமெனின், நன்றே வினாயினாய்; நன்றே விடை கூறுதும்:—

சிவபிரான் உண்டாக்கிய மதங்களை அம்மதத்தார்நம்முடன்வாதுக்குவாராமலிருக்கும்போது நாம்வலிந்துசென்று அவருடன் வாதுசெய்து அழிக்கப் புகின் சிவாஞ்ஞையின்றி அழியாது,

மற்று அவர் வலிந்து நம்மிடம்வந்து வாது செய்யப்புகின் அப்போழ்தவருடன் வாது செய்தழிக்க வேண்டுமென்றும், அது செய்யவல்லவர் அது செய்யாவழி மகாபாதகராவரென்றும் அவருடைய நட்பை வெறுத்து நீக்கிவிடல் வேண்டுமென்றும் சிவாகமத்தில் விதித்திருத்தலால், அது சிவாஞ்ஞையா மாகலின் வீதியிற் சென்ற பிள்ளையாரோடு வாதுக்குவந்த புத்தரைச் சம்பந்த சரணாலயர், பிள்ளையார் ஆஞ்ஞைப்படி வாதுசெய்து வெற்றி கொண்டதும் முன்னொடுபின் முரணாதென்க. அதனை,

“ நிறுத்திடவல் லானமல
 னானெறியை யென்றும்
மறுத்திடவல் லானவல
 மார்க்க மயலுற்றே
நிறுத்திலன் மறுத்தில
 னெனிற்கரிச னேசம்
அறுத்தவனை மாகைகரி
 சல்லவற மாமே ”

என்னுஞ் சிவதருமோத்தரத் திருவிருத்தத்தானுமறிக.

தாமே வலிந்துவாது செய்ய வந்தாரோடு வாதுசெய்து அவரை வெல்லாதவர் மகாபாதகர். அவர் தொடர்பை நீக்கவேண்டுமென்னும் விதியுண்மையால் அவ்விதியும் சிவாஞ்ஞை யென்பது பெறப்படுதலின் திருத்தெளிச்சேரி வாதமும் முன்னொடுபின் முரணாமை நன்குணர்ந்தேன். சிதம்பரத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில்வென்றதும் அவ்வாறாமோ வெனின், அது கூறுமே யமையும்; ஆயினும், வினவியபடியால்விடையிறுக்கின்றேன் :—

புத்தகுரு ஈழதேயத்திருந்து சோழதேயத்துச் சிதம்பரம் வந்து தில்லைவாழந்தணரை வலிந்து வாதுக்கழைத்தான். அவர் அவனுடன்வாதுசெய்ய வல்லரல்லராய் மனங்கவன்று அருநித்திரை செய்யுங்காலத்து நடராஜமூர்த்தி அவர்சொப்பனத்திற்றோன்றி “ வில்வவனத்தில் நமது பத்தன் ஒருவன் இருக்கின்றான். அவனையழைத்துவந்தால் வெற்றி கொள்ளுவான்” என்று திருவாய் மலர்ந்தருளிச் சென்றனர். தில்லைவாழந்தணர் விழித்தெழுந்து ஒருவர் கண்ட கனவை மற்றொருவருக்குச் சொல்லி எல்லார் கனவும் ஒத்திருத்தலான் மிகமகிழ்ச்சியுற்று வில்வவனத்திற் சென்றுபார்த்தபோது, ஓர் அடியார் வீற்றிருப்பக் கண்டு, சென்றணுகும்போது, மிருகங்கள் வெருண்டோட, அவற்றோடு சுவாமிகளுஞ் சேர்ந்து ஓட்டமெடுப்ப, அவரை அணுக முடியாதவர்களாய்த் தில்லைவாழந்தணர் மீண்டுவந்து உள்ளத்துறுதுயர் தவநனிமீக்கூரக்குறைத் துயில் கொள்ளுங்காலை, நடேசப்பெருமான் மீண்டும் அவர் சொப்பனத்திற்றோன்றி, அவர் துயரமொழிப்பான் திருவுளங் கொண்டு “மாணிக்கவாசகனென்றழையுங்கள் வருவன்” எனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினர். அந்தணரனைவரும் முந்தையினும் பன்மடங்கு உவகைமீக்கூர ஒருங்குகூடிச்சென்று, ‘‘மாணிக்க வாசக சுவாமிகளே!” என்றழைக்க, முன்போல் ஓட்டமெடாது எழுந்துவந்தனர். அவரை யழைத்துவந்து புத்தரொடு வாதுசெய்யும்படி யொட்டிவிட்டனர். வாதுசெய்த காலத்தில், சிவபிரான் தாஞ்செய்த சமயத்தை வாது செய்து பிறர் அழிக்க முடியாதென்பதை உணர்த்துதற்கு வாக்குவாதத்தில் புத்தர்களை மாணிக்கவாசக சுவாமிகள் வெற்றிகொள்ளாத வண்ணஞ் செய்து தமதருளால் வெல்லலாம் என்பதனை யுணர்த்துதற்குப் பேசின புத்தர்களை தமதருளால் ஊமைகளாக்குவித்தும், பேசாத ஈழதேயத்தரையன் புதல்வியைப் பேசுவிப்பித்தும் வெற்றி கொள்ளச் செய்தமையின், அதுவுஞ் சிவாஞ்ஞை யென்பது வெள்ளிடைமலை போல் வெளிப்படக்கிடத்தலான், முரணுதல் சண்டுங் காணப்படாமை நன்று கடைப்பிடிக்க.



மாணிக்கவாசக சுவாமிகள்புத்தரை வாதில் வென்றதும் சிவபிரான் திருவருளுபகாரத்தால் நிகழ்ந்தமையின் அதுவுஞ் சிவச்செய லென்பதுணர்ந்து மகிழ்ந்தேன். இங்கே எடுத்துக் காட்டிய நியாயங்களெல்லாம், சைவ சமயிகளுக்குப் புறச்சமயங்களும் அகச்சமயங்களும் சோபான முறையில் என்றும் உடன்பாடென்பதை நன்கு உணர்த்தின. அங்ஙனமாயினும், சைவ சித்தாந்த நூல்களுள் புறமதங்களின் மறுப்புக் கூறப்படுதலென்னையென்பையாயின், நன்மை பயக்குமாறு விடை கூறுதும்:—

‘‘சார்பயில் தேயந்தன்னில்”

‘‘வாழ்வெனு மையல்விட்டு”

என்னுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தங்களான் சோபான முறையாகச் சைவ சமயத்தை யடைந்தவர்கள் பின் அந்தக் சோபான மார்க்கங்களிற் கீழ்ப் போந்து பயனை இழவாமல், “உயர்சிவ ஞானத்தைப்” பெற்றுச் சிவபிரான் திருவருளை அடைதல் வேண்டுமென்பது “கரதலா மலகம்” போல் விளங்குதலால், மேலாகிய சைவ சமயத்தை யடைந்தவர்கள் பின்னர்க் கீழாகிய சோபான மார்க்கங்களிற் செல்லாத வண்ணம் தடுக்கும் அத்துணையே யன்றிப்பிறிதன்றெனக்கடைப்பிடிக்க.

தாயுமானவரும் இக்கருத்துப் பற்றியன்றே,

“ இயல்பென்றுந் திரியாம லியம மாதி
 யெண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
 பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி
 மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச் சென்னியில் வைத்திராசாங் கத்தி
 லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ”

என்றெடுத்துக் கொண்டு பல்லாற்றானும் வியந்தோதி யருளினர். அது நிற்க.

சபையின்கணுள்ள பல்வகைச் சமயப் பற்றுடைச் சகோதரர்களே! நீவிர் உங்களுங்கள் சமயநூல் விதிப்படிஒழுகிக் கடவுளை வழிபட்டுப் பயன்அடைதல் வேண்டும். அதுபோலச் சைவர்களாகிய நாமும் எங்கள் சைவநூல் விதிப்படி ஒழுகி எமது கடவுளாகிய சிவபெருமானை வழிபட்டுப் பயன் பெறுதல் வேண்டும். நீவிர் உங்களுங்கள் சமயங்களில் விசுவாசம் வைத்து உங்களுங்கள் கடவுளரைக் காலந் தவறாது வழிபட்டுத் தெய்வப் பற்றுடையாராய் ஒழுகுதலைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றோம். ஆதலான், நீவிர்உத்தமர். நம்மவர் அவ்வாறு ஒழுகக் கண்டிலமாகலின், அவரை அவ்வாறு கருத இடமில்லை. அதுபற்றி, நமது சமய தருமங்களை அவர்களுக்கு அறிவுறுத்தருளினால், உங்களைப் போலக் காலந் தவறாது கண்ணுதற்கடவுளை வழிபட்டு உய்வர் எனக்கருதி, அத்தருமங்களை மாத்திரம் அவர்களுக்குப் போதிக்கப் போகின்றோம். நீவிரும் கேட்டு உண்மை உணர்வீராக.

இப்போவைக்கண் எழுந்தருளியிருக்கும்அன்பார்ந்த பெரியோர்களே! முன்னுரைப் பிரசங்கத்திற்குக் கழகத்தார்

அடியேனுக்குக் கொடுத்த கால அளவு அரைமணி நேரமே. இப்பொழுது ஒன்றரைமணிநேரம் பேச நேர்ந்தது. அதற்குக் காரணம் சைவசமயம் மற்றைச் சமயங்களைத் தனக்கு இன்றியமையாத உறுப்புக்களாகக் கொண்டு தான் உறுப்பியாய் நின்று, தேகத்துறுப்புக்களைத் தேகிநேசித்து யாதாமொரு தீங்கும் வாராமற் காத்தல்போல, மற்றைச் சமயங்களைக் காக்கும் பெருந் தண்ணளியுடைய சமயமென்பதைச் சபையிலுள்ள யாவருக்கும் நன்கு தெரித்தற் பொருட்டேயாம். ஆகலின் காலாதீதமானது, கழகத்தாலும் சபையோராலும் பிரசாரகராலும் மன்னிக்கற்பாலதென வேண்டுதல் செய்து அடியேன் பிரசங்கத்தை இவ்வளவிற் பூர்த்தி செய்கின்றேன்.

---

# சி வ வ ழி பா டு

[தாராபுரம் - நா. ஆறுமுகம் பிள்ளை]

சிவ வழிபாடு என்னும் பெயரைப் படித்த அளவிலேயே, எளியேன் அதைப்பற்றிய சிறந்த பொருள்களை அரிய பெரிய நூல்களின் துணையால் பெரிதும் ஆராய்ந்து எழுதுவதாக எண்ணிவிட வேண்டாம்; மற்றென்னையோவெனின், நம் நாட்டுக்குப் பல்லாயிரங் கற்றொலைவிலுள்ள பிற நாட்டவர்களுங் கூடப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே சைவ சமயத்தவராகிய நம் போலவே சிவ வழிபாடு ஆற்றி வந்தனர் என்பதைப் பிற சமயத்தவர் நூலை ஆதாரவாகக் கொண்டு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பல்லாயிர ஆண்டுகட்கு முன்னிருந்து இஞ்ஞான்றுவரை நம் முன்னோரும் நாமும் எல்லாம் வல்ல ஆண்டவனைச் சிவலிங்கம் அம்மையப்பர் (அர்த்தநாரீச்சுரர்) முதலிய பல்வேறு திருவுருவங்களில் வைத்து (அவரவர் நிலைக்கு ஏற்றபடி) வணங்கி வருகின்றோம்.

நம் சமயத்தைக் காக்க நம்மவர் முனைந்து முன் வாராமையானும், ஏற்ற வழிகளைக் கைக் கொள்ளாமையானும் (ஏன்? நம்மவரிற் பெரும்பாலார்க்குச் சமயப்பற்று அடியோடு ஒழிந்து விட்டமையால் என்றே கூறலாம்) மேனாட்டினின்று ஈண்டுப் போந்த கிறித்துவர்களின் ஓயாப் பெரு முயற்சியானும் நம் நாட்டில் எங்கும் கிறித்து சமயம் பாவி விட்டது; பாவி வருகின்றது; ...............இக் கிறித்துவர்களில் பலர் நாம் வழிபடும் சிவலிங்கம், அம்மையப்பர் முதலிய திருவுருவங்களைப் பெரிதும் இகழ்ந்து பேசுகின்றனர்; ஆயினும், இயேசு கிறித்துவுக்கு முன்னிருந்த இவர்தம் சமயாசிரியன்மார் நம் போலவே சிவலிங்க வழிபாடும் அம்மையப்பர் வழிபாடும் ஆற்றி வந்தனர் என்பதை அவர்தம் பழ மறை கொண்டே எடுத்துக் காட்டுவாம்.

### ஆதியாகமம் 28

18. அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி அதின் மேல் எண்ணெய் வார்த்து,

19. அந்த ஸ்தலத்துக்குப் பெத்தேல் என்று பேரிட்டான்; அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் என்னும் பேர் இருந்தது.



22. நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசமபாகம் செலுத்துவேன் என்றுபொருத்தனை (பிரார்த்தனை) பண்ணிக் கொண்டான்.

சைவர்களாகிய நாம் வழிபடும் சிவலிங்கம் தூண்வடிவின தென்பதைச் சிறுமகாரும் நன்குணர்வர். மேல் எடுத்துக் காட்டிய கிறித்துவர் பழமறைச் சொற்றொடர்களால் அறியப்பெறும் தூண்வழிபாடு சிவலிங்க வழிபாடே யென்பது உண்மையான் உற்று நோக்குவார்க்குச் தெற்றெனப் புலனும்.

### ஆதியாகமம் 31

52. தீங்கு செய்ய நான் இந்தக் குவியலைக் கடந்து உன்னிடத்துக்கு வாராதபடிக்கும், நீ இந்தக் குவியலையும் இந்தத் தூணையும் கடந்து என்னிடத்துக்கு வாராதபடிக்கும் இந்தக் குவியலும் சாட்சி; இந்தத் தூணும் சாட்சி.

இவ்வெடுத்துக் காட்டால் பண்டை நாளில் அயல்நாடுகளில் இருந்த கிறித்துவர்களின் முன்னோர்கள் சிவலிங்கத்தைச் சான்றாக வைக்கும் வழக்கம் உடையர் என்பது விளங்கும். இவ்வழக்கம் பழங் காலத்துச் சைவர்கள்பால் இருந்த தொன்றே யென்பதைச் "சான்றழைத்த திருவிளையாட"லால் நன்குணரலாம். (இஞ்ஞான்றும் இறைவன் சான்றாக வாய்மை (சத்தியம்) கூறத் திருக்கோயிலுக்குச் செல்லும் வழக்கம் இந்துக்கள் பாலுண்டு.)

### யாத்ராகமம் 14

24. கிழக்கு வெளுத்து வரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து அவர்கள் சேனையைக் கலங்கடித்து.

25. அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர் இஸ்ரவேலரை விட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறார் என்றார்கள்.

மேலெழுதப் பெற்ற எடுத்துக்காட்டால் பண்டைஞான்று அயல்நாட்டில் இருந்த கிறித்துவர்களின் முன்னோர்கள் எங்கும் நிறைந்த முழுமுதற் பெரும் பொருளைத் தீவண்ணமும் மழைவண்ணமுமாய தூண் வடிவில் வணங்கி வந்தனர் என்பது பெறப்படும். இது வலப்பால் செந்நிறமும் இடப்பால் நீனிறமுமாய வடிவில் சைவர்களாகிய நாம் வழிபடும் நீலமேனி வாலிழைபாகன் (அம்மையப்பர்) வழிபாடே என்பது திண்ணம்.

[குறிப்பு:—பிற வுருவவழிபாடுகளை யெல்லாம் மறுத்துரைத்தவர்களாகிய இயேசு கிறித்து நாதரும் அவருக்கு முன்னிருந்த ஆசிரியர்களும் மேற் காட்டப்பெற்ற வழிபாடுகளை மறுத்திலர் என்றே தெரிகிறோம்.]

---

# அ றி யா மை வி னா

[தாராபுரம் - நா. ஆறுமுகம் பிள்ளை]

"கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென் றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானுமோர் மீனவன்பா
லேற்றுவந் தாருயி ருண்ட திறலொற்றைச் சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே"

என்னும் இத்திருவாசகத் திருப்பாண்டிப் பதிகச் செய்யுளின் பொருள் என்ன? இதிற் குறிக்கப்பட்ட வரலாறுகள் எவை? அன்புகூர்ந்து நம் "சித்தாந்தம்" வாயிலாக வெளியிடுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

# நூல் கற்கப்புகும் முறை

[தி. கு. கி. நாராயணசாமி]

இக்கட்டுரை ஜான்டாட் பாதிரியார் (Rev. John Todd) யாத்த மாணவர் கைநூல் (The Student's Manual), வாசித்தல் (Reading) அதிகாரத்தின் ஒரு பகுதியைத் (How shall you begin to read a book ?) தழுவி எழுதிய மொழிபெயர்ப்பாகும்.

எழுவாயாக கற்கப்புகுந்த நூலின் முகத்தலையில் (title-page) ஆக்கியோனை அறிந்து பின் அவர் வதிந்த இடமும் பிறவும் தெளிக. வெளியிட்டோர் யார்? சாதாரணமாக அவர்கள் எத்தகைய நூல்கள் வெளியிடுதல் வழக்கம்? இந்நூல் பற்றி அறிந்தது யாது? இன்னபிற கடாவிற்கு விடையை மனதில் இறுத்த பின் முகவுரையை (Introduction) வாசிக்கவும். அதில் ஆசிரியன் தன்னைப்பற்றி, தனது வேலையைப்பற்றிக் கூறுதல் யாது? அனைவரையும் இந்நூலை வாசிக்கச் சொல்வதற்கு ஆசிரியனிடமுள்ள துணிவென்ன? இன்னவும் தேர்க.

பொருள் அடக்கத்தில் (Contents) பொருள் வகுத்திருக்கும் வகுப்பால் (Chapter) நூல் அமைப்புப்பற்றி ஒரு முடிவுக்கு வருக. ஒரு வகுப்பினை எடுத்து அதனை வகுத்து நிறைத்துள்ள பொருட்கூறுகளையும், பின்னர் முக்கியப் பொருள் குறிக்கும் பக்கம் திருப்பி, அப்பொருள் எவ்விதம் விரித்து, விதந்து, உவமித்து விளக்கப்பட்டிருக்கிறதென்பதையும் ஓர்க. இவ்விதம் இரண்டொரு பரிசீலனையில் ஆசிரியர் கல்விக் கடலின் நிலைகண்டுணர்க. ஆழமில்லையேல் அதில் அறிவாகிய கலத்தைச் செலுத்தாது விடுக.

நிலைபயன் தருமெனின் பொருளின் தலைப்புகளை ஒன்றன்பின் ஒன்றாக உன்னி நூலின் அமைப்பு முழுமையும் மனதில் தெளிந்த பின்னரே வாசிக்கத்தொடங்கல் வேண்டும். நூலமைப்பு மனதில் அமைந்தபின் முதல் வகுப்பை விரிவாக எண்ணிக்கற்க ஆரம்பிக்கவும். வாசிக்கும் பொழுது, ஒவ்வொரு வாக்கியத்தினிறுதியிலும் வாக்கியத்தை முற்றிலும் அறிந்தோமா? அது குறிக்கும் கருத்து உண்மையா? முக்கியமானதா? கருத்திலிருக்கக்கூடிய உயரிய பொருள் ஏதேனும் மிளிர்கிறதா? இன்னபிற வினாக்களை ஒவ்வொரு தொகுப்பின் (Paragraph) இறுதியிலும் வினாவிக்கொள்க. எந்தத் தொகுப்பையும் அதன் உட்பொருள் மனதிலமையும் வரை பன்முறைவாசித்தல் வேண்டும். இந்நெறி பிடித்து முடித்து முடிவில் ஆசிரியன் எதை விளக்க முயன்று எதனை முடித்தனர் என்பதை ஓர்க.

இவ்வழி தொடர்ந்து செல்லுங்கால் நூல் சொந்தமெனின் உரியவரேனும் அல்லது உரிமை உடையவர் உத்திரவு பெற்று நோக்கத்திற் கேற்றவாறு தொகுப்புபற்றி, வாக்கியம்பற்றி குறியீடுகள் (Marks) கொண்டு விளக்கவும். குறியீடுகளை அவரவர்கட்கு ஏற்றவாறு பல கொள்ளினும் ஒரு வரியிற்பட்ட குறியீடுகள் அனைத்தும் ஓரே கருத்தைக் குறித்தல்வேண்டும். இம்முறை கையாண்டால் நூல் முடிக்க நாள் பல செல்லுமாயினும் ஐயம் திரிபு அறக் கற்கத்துணை புரியும். ஒரு நூல் இந்நெறியில் முடித்தல் பன்னூல் புரட்டுதலுக்கொவ்வும். இத்துறை, சிந்தித்தல்,



தெளிதல், காய்தல் உவத்தலின்றிச் சமன்செய்து சீர்தூக்க உற்றுழி உதவும். இவ்வகையில்கற்பின் நூல்நுவலும் கருத்து நமதாகி, எப்பொழுதும் நமது ஆளுகையிலிருக்கும் நூல் கற்கும் பொழுது முன்னும் பின்னும் சிந்தித்தல் தலையாய கடனாகும். படித்த நூல் பற்றி நண்பனோடு உரையாடி கருத்து அறிதல் நன்று. அதினும் ஓரே நூலை இருவர் கற்று ஆராய்தல் சால நன்மை பயக்கும்.

ஒரு வினாடியும் மதிப்புரைக்க மனதைச் செலுத்தலாகாது. சிறந்த ஆசிரியன் மாரும் நான்கிலொருபங்கு நேரத்தை மதிப்புரைக்குச் செலவு செய்கின்றனர். நூலின் ஒதுக்கிடத்தில் (Margin) தீட்டும் குறியீடுகள் நூலை மதிப்பிட ஏதுவாகும். குறியீட்டில் ஒவ்வொரு தொகுப்பின் ஆன்றகருத்து எளிதில் விளங்கும். கற்றதனைத்தும் மனதில்வைக்க ஏலாது. ஆதலின் படித்தவற்றை வகையாக வகுத்துக் கொள்ளல்வேண்டும். கற்றவற்றை எழுதவோ பிரதி செய்யவோ முடியாது. இங்குமங்கும் ஒரு பகுதியை நினைத்தல்கூடும். ஆதலின் குறிப்பகராதி (Index) செப்பம் செய்தால் எக்கருத்துபற்றியும் ஒப்பிடலாம். இவ்விதம் நூலுக்குச்சிறந்த குறிப்பகராதி வகுத்தால் பின்னர் படிப்போர்க்கும் பேருதவியாகும்.

---

# இருபதாம் நூற்றாண்டும் இந்தியாவின் வேட்கைகளும்

[அ. வரதநஞ்சைய பிள்ளை]

நமது நாட்டின் தற்காலப் போக்குகளையும், பொது மக்களின் நடவடிக்கைகளையும் எண்ணங்களின்புதிய மாறுதல்களையும் ஊன்றிக் கவனிக்கும் அறிவாளிகள் எவரும், இக்காலம், மிகவும் இன்றியமையாத சில சீர்திருத்தங்களை வேண்டி நிற்கின்றது என்றும் அத்தகைய சீர்திருத்தங்களை நன்றாய் ஆராய்ந்து பின்னால் யாதொரு தீங்கும் நேராத முறையில் அளித்தே தீரவேண்டுமென்றும்கூற முற்படுவார்கள். நெடுநாளாக இடைவிடாது வேலை செய்துவரும் இயந்திரம், பழுதுபடுவதும், அதனை உடனுக்குடன் பழுதுபார்த்துச் செப்பனிட்டமைப்பதும் நாம் அறிந்ததொன்றே. முற்காலத்திலும் இத்தகைய சீர்திருத்தங்கள் அவ்வப்போது தோன்றி வந்தன என்பது யாவரும்மறுக்கக்கூடாத உண்மையே. தமிழர்களுக்குள் முற்காலத்தில் இயல்பாக நடந்தேறிய "யாழோர்மணம்" (காந்தர்வவிவாகம்) பொய்யும் வழுவுந் தோன்றியதனால் கரணங்கள் (சடங்குகள்) உடன் கற்பிக்கப்பட்டன வென்றும், வேள்வியை முன்னிட்டுப் பசுக் கொலைகளும், நரபலிகளும் மிகுந்த காலத்தே புத்த சமயம்தோன்றி அடக்கிற்றென்றும், ஒரு சமயத்தாரை ஒரு சமயத்தார் வெறுத்துக் கொடுந் தீங்கிழைப்ப நேர்ந்தபொழுது அவ்வச் சமயச் சார்பில் பல அவதார புருடர்கள் தோன்றி அடக்கி வந்தனரென்றும் வரலாற்றால் உணர்கின்றோம். நோய் மிகுந்து துன்

புறுத்துங்கால், மருந்துண்டு நீக்குவது போல் நாட்டில் தாறுமாறான குழப்பங்களும் கொடுமைகளும் மடமையும் மிகுந்து மக்களின் ஆக்கத்தைத் தொலைக்கும் காலத்தில் அவற்றைப்போக்கி நன்னிலைமைக்குக் கொணர்வதற்கு ஏற்றவைகளைச் செய்தேதீரவேண்டும்.

இவ்விருபதாம் நூற்றாண்டில் நம் நாட்டின் நிலைமை யாது? அதனை அவாவும் திருத்தங்கள் எவை? அவற்றை எவ்வளவுக்கு என்னென்ன திட்டங்களின்மேல் வழங்கலாம். என்றெல்லாம் பலவகையால் ஆராய்ந்து முடிவு கட்டவேண்டிய பெரும் பொறுப்பு, இந்நாட்டின் கல்விகற்ற மக்கள் தலைமேலும் அறிவு மிக்கசெல்வர்கள் தலைமீதும் பெருஞ்சுமையாகப் பாரித்திருகின்றது. தாய் நாட்டன்பு மிக்குள்ள ஒவ்வோர் அறிஞரும் இப்பாரத்தைப் பங்கிட்டுச் சுமக்க உரிமை பூண்டவர்களேயாகின்றார்கள். பன்னெடு நாள் பிணிபட்டு வருந்தும் நோயாளிஉண்ண விரும்பும் பண்டங்களை யெல்லாம் நோய் தீர்க்கும் மருத்துவன் உண்ணலாம் என்று சொல்ல முடியாது. தான் கொடுக்கும் மருந்தின் வீறு, சில உண் பொருட்களால் குறைந்தும், அல்லது கெட்டும், பிணியாளிக்குப் பெருந்துன்பத்தைப் பின்னால் விளைக்கும் என்று தெரிந்தால் அவற்றை உண்ணலாகாது என்றே விலக்குவான். நோய் தணிப்பதற்குவேண்டியதும், தான் புகட்டும் மருந்தின் வலியைப் பெருகுவிப்பதும் ஆகிய குறிப்பிட்ட சில உண்பொருட்களையேஉண்பிப்பான். அவ்வாறேமுன் பின் ஆராயாது மனம் போனவாறு கூறும் சீர்திருத்தங்களை முழுவதூம் ஆய்ந்து பின்வரும் குற்றங்களைக்கண்டு நீக்கி நேரிய முறையில் வேண்டற்பாலனவாகிய சீர் திருத்தங்களை இக் காலத்திற்கு அளித்தல் தக்கது.

''நோய்நாடி நோய் முதனாடி'' யது தீரும் வாய்நாடி வாய்ப்பச்செயல்மருத்துவர் கடனன்றோ; அங்ஙனமே நம் தாய்நாட்டுக் குற்றநோய்கள் எவை? அவைகள் ஏன்உண்டாயின? அவற்றை அறநீக்கி உய்விக்கும் வழிகள் என்னென்ன? அவற்றை எவ்வகையில் செய்யவேண்டும் என ஒவ்வோர் அறிவாளரும் கவனித்து ஆராய்ந்து துணிந்துவெளியிட்டுநடவடிக்கையில்கலந்து கொள்ளப் பலருடனும் உலாவி ஒப்புரவுசெய்தல்வேண்டும். தாய்நாட்டின் துயரம் தீர்க்கப் பயன்படாத கல்வி கல்வியாகாது. அறிவும் அறிவாகமாட்டாது. தன்நாட்டின் எளியநிலைமைக்கு இரக்கமுறாதமனிதனும்மனிதனாகான்.

இனி நம்நாட்டிற் செய்திய இன்னல் யாது? என்பதனையும், அது ஏன்உண்டாயிற்றென்பதையும் நோக்குவோம்.

முதற்கேள்விக்கு விடை, இத்தேயம் பொருள்வருவாய் குறைந்து செலவு மேலிட்டு வறுமைக் கடலில் மூழ்கி மரணமடையும் தறுவாயில் திக்கு முக்காடுகின்றது என்பதேயாம். இரண்டாவதற்கு விடைசொல்வது எளியகாரியமன்று. பல காரணங்கள் ஒருங்கு சேர்ந்து இவ்வறிய நிலைமைக்கு நாட்டைச் சிறுகச்சிறுக நகர்த்துவிட்டது. அக் காரணங்களுள் மிகவும் சிறந்த முதற்காரணம் நாட்டின் கைத்தொழில்கள் நாசமாய், மக்கள், பிறநாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கு உழைப்பவர்களாய், தங்கட்குநாடோறும்வேண்டும் எல்லாப் பொருள்களையும் (சில விளைபொருள் தவிர) பிறதேயத்தாரிடம் பெற்றே தீரும் நிலைமைக்கு வந்து விட்டதேயாம். இவ்வுண்மையை எவ



ரும் ஒப்புக்கொள்கின்றனர். ஒரு நாட்டினை ஓர் உடம்பென்று குறிப்போமானால் பொருளாதாரத்தை அவ்வுடம்பில் இடை விடாது பரவிப் பாயும் குருதி (இரத்தம்) என்றே கூறலாம். உடம்பில் எந்தப் பக்கத்திலேனும் குருதியோட்டம் இருந்தால் கெடுதி நேரிடாது. அஃதேபோல் ஒரு நாட்டின் உள்ளேயே பொருள் வரவும் செலவும் நேரிட்டுக் கொண்டிருக்கும் வரை அந்நாடு வறுமையால் எக்காலும் வாட்டமுறாது. ஒருடம்பில் அன்றாடம் ஊறும் செந்நீர் முழுவதும் வாய்வைத்துறிஞ்சும் பிசாசுகள் வயிற்றுட் புகுமாயின் அச்சட்டகம் விரைவில் வலுவிழந்து விழுந்து பிணமாவதற்குத் தடையில்லை. பொன்கொழிக்கும் பாரதநாடு, தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைக்கும் பயன்மிகும் நன்னாடு எங்கள் தாய்நாடு எத்தனைநாள் தன் செந்நீரைக் குபு குபு என்று புறத்தே சொரிந்து உயிர் வாழும்? எத்தனைநாள் எலும்புத் தொளையினுட் கிடக்கும் ஊன் நீரால் உயிர் வாழும்? முப்பது கோடி மக்கள் இடைவிடாது பால் அற்ற வறுமுலையைச் சுவைக்கும்பெரிய வருத்தத்தை எத்தனை நாள் தாங்கி நிற்கும்? எங்கள் அன்னை பண்டு பெற்ற முழுவுரத்தால் இது காறும் சளையாமல் நின்றனள்! மக்காள்! கலங்கன்மின் என்று கையமைத்துத் தன் வாட்டத்தை வெளியிடாமல் அடக்கி எங்கட்கு இன்முகம் காட்டி மென்மொழி புகன்றாள்! அந்தோ! இக்கால் அவள் முகம் பொலிவு குன்றிச் சாக் குறிகாட்டு கின்றதே. பால் பாலெனப் பசித்தழும் மக்கள் கதறுங் கூச்சல்வானம் வெட்டிப்பமே விடுகின்றதே! இவ்வருத்த மனைத்தும் கண்டும் காணார்போலிருக்கும் தன் அறிவுள்ள மக்களைப்பற்றி அவள் என்ன நினைக்கின்றனளோ? பொதுநலம் விழைந்து தன்னலம் விரும்பாப் புண்ணிய மக்கள் மகாத்மாவும் அவர் போன்ற சிற்சிலருமன்றி மற்றிலரேயோ? யாரே என் துயர் தீர்ப்பார்? என் அருமைக்கண்மணிகள் மாற்றாந்தாய் கையில் ஒப்படைக்க என் மனம் ஒவ்வவில்லையே என்று பல ஒப்பாரிகளை இனைந்து பாடுகிறாள்; தலைவலிக்குக் கட்டிலைத்திருப்பிப் போடுவது போல் என் கொடிய நோயின் மூல காரணம் அறியாது என் அன்புள்ள மழலைச் சிறுவர் என்னென்னவோகூறுகின்றனரே! அவர் கூறும் சொற்கள் எனக்கு மிக நாணம் வருவிப்பனவாகின்றனவே! மக்காள்! நான் பிழைத்து உங்கட்கு நன்மை செய்ய விழைவீராயின் என் உடற் குருதி பாலாக மாறும் வண்ணம் வெளிப்படாது நிறுத்துவீர்களாக! இப் பெரிய கடமையை நீங்கள் செய்யாவிடில், ஆவோ! என் அருமைக்கண் மணிகாள்! நீவிர் தாயற்ற சேயாய் விடுவீர்கள். ரோமாபுரி, பாபிலோனியா முதலிய சிறந்த நாகரிகம் பெற்ற நாடுகளின் தோற்றமும் இருப்பும் அழிவும் கண்ட முதியவள் நான். அவைகளின் நிலை குலைத்த துன்பம் என்னையும் அணுகும்காலம் வாராதென்று துணிந்த மடமையேனும் யானே! ''அகடுறயார் மாட்டும்நில்லாது செல்வம் சகடக் காற் போல வரும்'' என்று என் தமிழ்த் தோழி சொல்லியது வேறெவர்க்காயினும் பொருந்துமென்றிருந்த பெருமிதம் இப்போதெங்கேயோ சென்றுவிட்டதே. அருமந்த புதல்வர்காள்! என் உடம்பு மெலிவு தீர்க்கும் மருந்து அயல் நாட்டில் தானிருக்கிறது. அங்கே சென்றுதான் நீங்கள் கொண்டுவா

187156

வேண்டும். கைத்தொழிலில்லாத நாடு நாடாகாது, என்னிடத்துள்ளபொருள்களை நீங்கள் பயன்படுத்தும் முறையினும் பிறநாட்டார் பயன்படுத்தும் முறை சிறந்தது. அத்துறையில் அவர்கள் நாட்பட்ட பழக்கத்தால் கை தேர்ந்து விட்டனர். உங்கட்கு அத்தகைய அறிவும் ஆற்றலும் பழக்கமில்லாமையால் கை வந்திலது. அவர்கள் பலகாலும் எனது கொழுப்புடன் சேர்ந்த குருதியை யுண்டே செழுமை வாய்ந் திருக்கின்றனர். என்னனைய நாட்டு மக்கள் எல்லாம் கண் விழித்து விட்டனர். அந்தோ! என்னிளஞ் சிறார்களே! நீங்கள் மட்டும் இன்னும் விழியாமல்உறங்குகின்றீர்களே" என்றயர்வாளாயினள். இயல்பாக நமது சோர்வினாலும், பின் அரசு முறையாலும் கைத்தொழில் கவிழ்ந்து விட்டது. நம்மை ஆளுவோர் ஆங்கில நாட்டார். அவர்களில் பாராளுமன்று (பார்லி மெண்டு) அந்நாட்டினரால் தேர்ந் தெடுக்கப்படுவோரால் நடைபெறுவது. ஆகவே தமது நாட்டின் ஆக்கத்திற்குக் குறைவு செய்ய ஒரு போதும் அவர்கள் முற்படமாட்டார்கள்.

இரக்க மிகுந்த வள்ளல்கள் சிலர் முன்வரினும் அவரைக்கடிந்து தடுக்கும் வீரர்கள் பலர் மிக்கிருப்பார்கள். தமது நாட்டுப் பொருள்களை இங்குச் செலுத்திப் பணம் பெறுவதற்காக இந்நாட்டுப் பொருள்களை அதிக வரி விதித்து மடக்கியடிப்பர். அந்நாட்டினர்க்கு எளிய விலையில் இந்நாட்டுப் பொருள் கிடைப்பதாக அங்கிருந்து கைத்தொழிற் றிறமையால் அதே பொருள் மிக உயர்ந்த விலைக்கு இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. ஜப்பான் ஜர்மனி அமெரிக்கா முதலியநாடுகளுக்கும் நம் நாட்டுப்பணம் தாராளமாய்ப் போய்க்கொண்டு தானிருக்கின்றது. போன பணத்திற்குமாறாக அவற்றில் ஒரு கூறேனும் இங்குத் திரும்பவழியில்லை. ஏனென்றால் அவர்கள் விருப்பத்துக்கும் தேவைக்கும் உரிய பொருள்களை நாம் செய்ய அறியோம். இஃதே நம் நாட்டின் பெரும் பான்மையான செல்வத்தைச் சூறை கொள்ளும் பெரிய காரணம். உள்ளதை இழந்து புதுவருவாயுமில்லையானால் வறுமை மிகாதோ? மற்று, நம்மில் ஜாதிப் பெருமையும் சமயப் பிணக்கமும் கல்வியில்லாமடமையும், சிக்கனமற்ற செலவும், கல்விமான்கள் தமது பழைய புராணங்களின் கற்பனை அலங்காரங்களைப் பாராட்டி நாட்டின் முற்காலப் பெருமைகளையே சிறந்தது என்று கூறும் அளவுக்குத் தங்கள் காலத்தைக் குறுக்கிவிடுவதும், செல்வர்கள், பிறர் வாழ்ந்தாலென் தாழ்ந்தாலென்! தமது தொந்தி நிறையவுண்ப தேசாலும் என்றிறுமாந்து நாட்டின் ஏழ்மைக்கிரங்கி யுதவா வன்கண்ணராக இருப்பதும், கல்வி கற்றோர் பலரும் உத்தியோக ஆசைப் பேய் பிடித்து ஒருவர்மேல் ஒருவர் தடுமாறி வீழ்ந்து எனக்கு உனக் கென்று போட்டியிடுவதும், வேலை பெறாது, கைப்பொருளையும் ஆங்கில பாஷை கற்பதில் அழித்தொழித்து பிச்சை புக்குண்ண முயல்வதும், ஆண்களும் பெண்களும் கல்வியில்லாது முழு மிருகங்களா வளர விடப்பட்டு, நமது தாய்நாடு, நம் தாய் நாட்டுச் சகோதரர் என்று பற்றுக் கொண்டு பாராட்டல் ஒழிந்ததும் இந்நாடும், பிறநாடும் எவ்வகை நிலைமையில் இருக்கின்றது என ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவு பிறவாமல், தன் வீட்டையே ஒரு தேச



மாகவும், தன் குடும்பத்தாரையே குடிகளாகவும் தன்னையே முடிபுனைந்த மன்னனாகவும் தானிருக்கும் சிற்றூரையே மண்ணுலக வரைப் பென்றும் மதிமயங்கிக் கிடக்கவைத்திருப்பதும், இன்னோரன்ன பல காரணங்களும் சேர்ந்து நாட்டின் வளத்தை நாசமடைவித்துச் சீதேவியைச் செல்லத்துரத்தி மூதேவியை முக மூடி நீக்கி உலாவும் வண்ணம் செய்து விட்டன.

சாதியும் சமயமும் எதற்காக ஏற்பட்டன? அவற்றை எம்மட்டிலும் கைப்பற்றலாம்? எல்லாச் சமயமும் சாதியும் கைக் கொண்டொழுகத்தக்க மிக விழுமிய தூய உயிர் நிலையான அறம்யாது? அவ்வறம் ஒன்று கொள்ளப்படாவிடின் சாதியும் சமயமும் சமயச் சடங்கும் உயிரில்லாப்பிணமாகும் என்று நடுநிலைமை குன்றாத மெய்யறிவால் உணரப் பெறாத செருக்குமிக்க மனித விலங்குகள் நாட்குநாட்பல்கின. ஜீவ கலையுடன் புணர்க்கப் பட்ட தத்துவங்களை விடுத்து உயிர் போய் அழுகிய பிணத்தைப் போற்றுவது போல், முன்னோர் குறிப்போடு புணர்த்த கொள்கைகளைக் கைவிட்டு, போலிச் சடங்குகளைச் செய்யும் போலி மனிதர்கள் மிகுந்து விட்டனர்.

எவ்வுயிரும் தன்னுயிர் போலெண்ணும்படி முந்தையோர் புகன்ற அறத்தைத்கைவிட்டபின்,அவர்கள்கொண்ட சமயத்தை இவர்கள் கைக் கொண்டாலென்? கொள்ளாவிடின் என்? பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள் ஆக இராவிடின் அப்பூச்சால் ஆம் பயன் யாது? மார்பிலே தாழ்வடமும் மனதிலே கரவடமுமுடையபொய்வேடம் பூண்பதினும் உள்ளும் புறமும் ஒன்றுபட்ட சுயமரியாதையே சிறந்ததாமன்றோ? தாழ்ந்தோரைத் தாழ்ந்தோராக வே நிறுத்தவிரும்பினால் நம்மை ஆளும் அன்னிய அரசுக்கு நாமும் மீளா அடிமைகளாக அடங்கிக் கிடக்கவேண்டியதுதானே முறை. இல்லை நாங்கள் சுயராஜ்யம் பெறுவோம் இனிஅடிமைகளாக இருத்தல் முடியாது அஃது எங்களுக்கு அடாது என்போமேல் அங்ஙனமே நாம் தாழ்த்திய பிறரும் நம்மோடு சமவுரிமைபெறக்கேட்பதில் என்ன தவறுண்டு? தனக்கொன்றும் பிறர்க்கொன்றுமா நீதி நூன்முறை, அக்காலம் இனிச் செல்லாது.

இதுகாறும் கூறியவாற்றால் நம்நாட்டின் வறியநிலைமைக்குக்காரணம் நமது சோம்பலும் மடமையும் கைத்தொழிற் குறைவும் அந்நியஆட்சியின் ஆதிக்கத் தூண்டுதலும், கல்வியின்மையும் காலமறிந்து கடமைசெய்யாமையும் மற்றை நாட்டினரை ஒப்பு நோக்கி ஓர்ந்துணராத குறையும், ஒற்றுமையில்லா ஊனமும் சாதிச்செருக்கு சமயச் செருக்குகளை மிகவடைந்து அவற்றின். உயிர்களாகிய நல்லறங்களைத் தத்துவார்த்தங்களைஇழந்த பேதைமையும் எளியோர்க்கிரங்காதவன்கண்மையும் பிறவுமாம் என்பது பெற்றாம். இனி இந்நோயை நமது தாயைவிட்டு நீங்கி எப்போதும் இங்கே தலைகாட்டாமல் ஓட்டி விடுதற்கேற்ற வழிகளையும் அவற்றைச் செய்யும் முறைகளையும் எமது சிற்றறிவு கூட்டி முடிக்கும் முறையிற் செப்பி முடிப்பாம்.

(தொடரும்)

# தென்புலத்தார்

[ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்]

திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த தெய்வ நூலிலே, இல்லறவியலிலே, "இல்வாழ்க்கை" என்னும் அதிகாரத்திலே முதலிரண்டு திருக்குறள்களினாலும் இல்வாழ்வான், எல்லா வுபகாரத்திற்கு முரியன் என்று கூறுமுகத்தானே, அவன் சிறப்புணர்த்திப் பின், அவனாற் செய்யப்படும் அறங்கள் உணர்த்தத் தொடங்கி, அவ்வறங்கள் பலவற்றுள்ளும், தர்ப்பணமும் சிராத்த முதலிய தானமும் தருமமும் செய்தலாகிய பிதிரர் வழிபாடு இல்வாழ்வானுக்கு இன்றியமையாத கடப்பாடாகக் கொண்டொழுகும் சிறப்பு வழிபாடு என்பது தெரிப்பான், மூன்றாந் திருக்குறளில் "தென்புலத்தார்" என முதற்கண் வைத்தோதினார் நாயனார் என்றுணர்க.

## தென்புலத்தார் யார்?

அத்திருக்குறளுக்கு உரைகண்ட பரிமேலழகர் தென்புலத்தார் "பிதிரர்" என்றும், அவர் "படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி" என்றும், "அவர்க்கிடம் தென்றிசையாகலின், 'தென்புலத்தார்' என்றார்" என்றும் கூறினார். ஈண்டுக் கடவுளரென்றது "கடவுட்சாதி" என்றார் பிதிரர் மூவகைப்படுதலின். அவராவார், கந்த சண்ட கணாதீசர், ஈச சாந்த சதாசிவர், வசு ருத்திர ஆதித்தர் என்பார். பிதிர் கருமஞ் செய்வார்,வைதிகமார்க்கத்தாரும்சைவ மார்க்கத்தாருமன்றி ஏனை மார்க்கத்தாரல்லர். முன்னை இருபாலரும் சைவ சமயிகட்குரிய பிதிர்தேவர்; பின்னை ஒரு பாலார் வைதிக சமயிகளுக்குரிய பிதிர்தேவர். ஆகலான், சொற்பல்காமைப் பொருட்டு இருமார்க்கத்தாருக்கு மேற்பக்கடவுட் சாதி என்று பொதுப்படக் கூறியொழிந்தார் உரை கண்டார். இவரே பிதிரராவார் என்று கடைப் பிடிக்க.

இறந்த தந்தை தாயர் "அடுத்த வினை காட்டும் நிமித்தம்பற்றி" உயர்திணையாகப் பிறந்தனரோ, அஃறிணையாகப் பிறந்தனரோ, சுவர்க்கம் புக்கனரோ, நரகம் புக்கனரோ, புவியிற் புக்கனரோ என்றறிந்து மக்களாயினார் நேரே பிதிர் வழிபாடு செய்யவும், இறந்த பிதிரர் அதனை அறிந்து ஏற்றுப் பயனடையவும் இயலாதென்பதை முற்றறிவனாகிய சிவபிரான் உணர்ந்தே அவ்வழிபாட்டை ஏற்று, இறந்த பிதிரர் யாண்டுப்புக்கனரோ ஆண்டு அவர்க்குச் சேர்த்துப் பயனுறுவித்தற் பொருட்டு, அவாந்தர சிருட்டி யாரம்ப காலத்திலே, அயனைக்கொண்டு கந்த சண்ட கணாதீசர், ஈச சாந்த சதாசிவர், வசுருத்திர ஆதித்தர் என்னுங் கடவுட் சாதியைப் படைப்பித்துத் தென்றிசையிலுள்ள புவனத்தில் இருத்துவித்தனர் என்று உண்மை கடைப் பிடிக்க.

சிவாஞ்ஞையினாலே பிரமாவின் சிருட்டி நடப்பதென்பது "பூ வண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போதவின்ப-மாவண்ண மெய்கொண்ட வன்றன் வலியாணை தாங்கி மூவண்ணன் சந்நிதி முத்தொழில் செய்யவாளா மேவண்ணல்" என்பதனானுமறிக.



தென்புலத்தார் என்பதற்குத் தக்கிண பூமியில் வசிப்பவர் என்பது பொருளன்று. தென்றிசைக்கணுள்ள புவனத்தில் வசிப்பவர் என்னும் பொருளதென்றுணர்க. தேவர் பூமியில் வசிப்பவரன்று, திக்குப்பாலகர்க்கு மிதுவே. இவர்கள் புவன முதலியவற்றை ஆகமங்களுட் காண்க.

தேவர், இறத்தற்குப் பதினைந்து தினத்தின்முன் அவர் கால் நிலந்தோயும், கண்ணிமைக்கும், அவரணிந்த பூ வாடுமென்க. இவை சமணர்க்கும் உடன்பாடென்பது அவர் நூலுட் காண்க. இங்ஙனங் கூறுதல் "கானிலங்கொள வலங்கொண்டு மேவினார் கடிமதிற் றிருவாயில்" என்பதனோடு முரணும் பிறவெனின், அது சிவாஞ்ஞையால் நிகழ்ந்தமையின், தேவர் இயற்கைத் தன்மையோடு முரணாதென்றுணர்க. பிறாண்டும் இவ்வாறு வருவனவற்றிற்கும் இதுவே சமாதானமெனக் கடைப்பிடிக்க.

இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தின் பின் அவ்வாழ்க்கைத் துணைநலம் கூறவேண்டியது முறையாகலின், அதனைக் கூறி, இல்வாழ்வானும் வாழ்க்கைத்துணையுங் கூடிப் புதல்வரைப் பெறவேண்டு மாகலின், புதல்வரைப் பெறுதல் என்னும் அதிகாரம் அதன் பின் கூறத்தொடங்கி, முதற்குறளாற் புதல்வர்ப் பேற்றின் சிறப்புக் கூறி,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"

"தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொருள்
தந்தம் வினையான் வரும்"

என்னும் பின்னிரு குறள்களாலும் நன்மக்கட்பெற்றார் மறுமைப் பயன் கூறினார்.

தந்தை தாயர் தீவினை தேய்தற் பொருட்டு மைந்தராயினார், அவரை நோக்கிச் செய்யும் தர்ப்பண சிராத்தாதி நற்கருமங்களின் பலன் அவரையடைதலால் "தம்பொருளென்ப தம் மக்கள்" என்றார்.

இக்குறள்களினாலும், மைந்தராயினார், தந்தை தாயர் முதலிய இறந்த பிதிரர் பொருட்டு, இறவாத பிதிர் தேவராய்த் தென்றிசைப் புவனவாசிகளாக விருக்கும், "கந்தர்" முதல் "ஆதித்தர்" ஈறாகிய கடவுட் சாதிக்குத் தர்ப்பண சிராத்தாதி தானதருமங்கள்செய்யுங் கடப்பாடுடையர் என்பதை நாயனார் ஐயவிபரீதமறச் செவ்வனே தெரித்தருளினார். இக்கருத்துப் பற்றியே பிறரும்,

"சித்திர மிலகு செவ்வாய்ச்
சீறடிச் சிறுவர் தம்மைப்
புத்திர னென்னுஞ் சொற்குப்
பொருணிலை யயர்த்தி போலாம்"

எனவும்,

"இறந்தவர்கள் வேண்டியதோர்
துப்புரவு நல்கி
இறந்தவர்கள் காமுறு
மிருங்கட னியற்றி
அறம்பலவு மாற்றிவிருந்
தோம்புமுறை யல்லாற்
பிறந்த நெறி யாலுளதோர்
பேருதவி யுண்டோ"

எனவும் கூறியதூஉ மென்க.

புத்திரர் - புத் என்னு நரகத்தினின்று பிறந்த பிதிரரைத் தூக்கிவிடுவோர் என்பது பொருள்.

சுருதிஸ்மிருதி புராணேதிகாச முதலிய எல்லா நூல்களிலும் பிதிரர் வழிபாடாகிய சிராத்த முதலியன கூறப்பட்டிருத்தலை ஆண்டாண்டுக் கண்டு

தேறுக. கயாசிராத்தம் ஆபால கோபாலப் பிரசித்தம்.

இவற்றை யறியா மாந்தர் "செத்தவர் எந்தப் பிறப்பிற் பிறந்தாரோ; எங்கே போயினரோ; இவர்கள் பொருட்டுச் செய்யுந் தர்ப்பண சிராத்தாதிகளை இவர்கள் எங்ஙனம் ஏற்றுப் பலனடைவர்; அங்ஙனம் பலனடைவரென்றல், கோயம்புத்தூரில், தெருவருகிலுள்ள கிணற்றில், ஒருவன் தண்ணீர் இறைத்தான், வழிப்போக்கன் ஒருவன் வெள்ளிடை யிற்றண்ணீர் செல்லுதலைக் கண்டு, எதற்காகத் தண்ணீர் இறைக்கின்றீர் என்று கேட்டான். கோகர்ணத்து வைத்திருக்கும்வாழைக்குப் பாய்ச்சுகின்றேன் என்று விடையிறுத்தான். இடையிலுள்ள மலைகளும், காடுகளும், ஆறுகளும், கடலும் கழியுங்கடந்து, கோகர்ணத்துக்குக் கோயம்புத்தூர் தண்ணீர் போய்ச் சேருமா என்று பரிகசித்துச் சென்றனன். இக்கதையொடொக்கு"மென்று கூறிக்களித்து "அவ்வளவி லவன் மகிழுக" என்பதற்கிலக்காயினர். அவர் தம்மை மகிழ்ந்து கொண்டாடுமோர்தருமுண்டு. இவர்கள்தான் "நற்றூமரைக் கயத்து நல்லன்னஞ் சேர்ந்தாற்போற்" சேர்ந்தவர்கள் போலும். இவர்கள் தாய் தந்தையருக்குத் தாஞ்செய்ய வேண்டிய இன்றியமையாத பிதிரர் வழிபாடாகிய தர்ப்பண சிராத்த தான தருமங்களைச் செய்ய வொட்டாதிழப்பித்து, "எந் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னுந் திருக்குறட்கு இவரை இலக்காக்கிய ஊழார் நனிவாழிய.

இனி, முற்றத்துறந்த பட்டினத்தடிகளும், பிற்காலத்து எம்போல் வாரும் உண்மை உணர்ந்து உய்யும் பொருட்டுத் தாயாருடைய தகனக்கிரியை முதலியவற்றைச் செய்தமையினமையாது,

" முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே "

என்றற் றொடக்கத்துச் செய்யுள்களைப் பாடி வைத்துப் போந்தனரென்று நன்குணர்க.

இன்னும்,

" பெற்றான் வளர்த்தாள் பெயரிட்டாள்
[பெற்ற பிள்ளை
பித்தானு லென்செய்வாள் பின் "

என்று இரங்கிக் கூறியதூஉம் தந்தை தாயர் கடன் செய்யாத பிள்ளைகளும், அப்பிள்ளைகளைப்பெற்ற தந்தை தாயரும்பயனை இழந்தனரென்பதை நோக்கியே யென்றுணர்க.

" வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம் "

'இருவகை வழக்கினும் நிலைபெற்ற' தர்ப்பண சிராத்த பிதிரர் வழிபாடுகள் நேற்றின்று நிகழ்வனவன்று. பண்டுதொட்டுப் பயின்றுவரும் உன்னத வழிபாடென்பது, வைதிக சைவ நூல்களாலும் பட்டினத்தடிகள் ஏனை ஆன்றோர்கள் ஆசாரத்தாலும் யாவரும் மிக இலகுவாக அறிந்துகொள்ளலாம். இத்துணை விசிட்ட வழிபாட்டிற்குத் தடைகூறுதல், வேதாகம வழக்கோடும் ஆன்றோர் ஆசாரத்தோடும் முரணிக் கூறுவார் கூற்றுமென விடுக்க. இவ்வியல்பிற்றாயதோர் கருத்துப்பற்றியன்றே, "சொல்லுவார் தமக்கறையோ சொல்லொணாதே" எனச் சிவஞான சித்தியுட் கூறப்பட்டதூஉமென்றுணர்ந்து மகிழ்க.

# சேந்தனார்

[இலக்கண விளக்கவாசிரியர் பரம்பரை - சோமசுந்தரதேசிகர்]

[உரிமையுடையது]

திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மருள்ளே சேந்தனார் என்பவருமொருவர். இப்பெயருடையார் பலராவர். அகராதி நூல்களில் முதலாவதாகக் கருதப்படும் திவாகரம் இயற்றின திவாகரனைப் போற்றிய சேந்தன் ஒருவர். திருவிசைப்பா பாடிய சேந்தனார் ஒருவர். காதற்ற வூசியும் வாராது காண்கடை வழிக்கே யென்ற பட்டினத்தடிகட்கு நன்மதி யமைச்சராயிருந்த சேந்தனார் ஒருவர். வீரசோழிய மென்ற இலக்கண எதிர்நூல் இயற்றிய புத்தமித்திரனாகிய சேந்தனொருவர். இன்னு மனேகருளர். இவ்வடைவினருள் திவாகரனைப் போற்றியவரும், வீர சோழிய நூலாசிரியரும் இவண் வேண்டப்படாத வேற்றினத்தவராவர். எஞ்சியவருள் பட்டினத்தடிகள் சேந்தனாரும், திருவிசைப்பாச் சேந்தனாரும் ஒருவரே யென்னுங் கொள்கையே இதுகாறும் நிலவி வருகின்றது. ஆயினும் பட்டினத்தடிகளது திருவாக்காகக்கூறப்படும்,

" மத்தளை தயிருண் டானும்
மலர்மிசை மன்னினானும்
நித்தமுந் தேடிக் காணா
நிமலனை யமல மூர்த்தி
செய்த்தலை கயல்பாய் நாங்கூர்ச்
சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கி யென்முன்
காட்டுவெண் காட்டனானே "

என்ற செய்யுளை நன்மதி யமைச்சர் சேந்தனார் நாங்கூருடையார் என்பதை தெள்ளிதிற் காட்டும். இவ்வாறன்றி அடிகள் செல்வத்தை யவர் விருப்பின்படி செலவுசெய்த குற்றத்திற்காக நாங்கூர்ச் சிறையில் வேந்தனிட்டானென்றும், சேந்தன் மக்கள் முறையீட்டிற்கு இரங்கிப் பட்டினத்தடிகள் விநாயகக் கடவுளை வேண்டினரென்றும் கதை யுண்டாகையான், பாவிற் கூறிய நாங்கூர் சிறையைக் குறிக்குமென்பர். அவ்வாறாயின் செய்யுள் சிறையைக் குறித்திருக்கும். அவ்வாறு குறியாது நாங்கூர்ச் சேந்தனை யென்பதனால் நாங்கூருக்கு உடைய, அன்றி நாங்கூறிற் பிறந்த என்று பொருள் பயக்குமே யொழிய வேறு பொருள் பயவாமை காணலாம்.

இனி சேந்தனாரைத் தளையிட்டவன் ஒரு குலோத்துங்கச் சோழன் என்று சோழமண்டல சதகம் ௩௩-வது செய்யுள் கூறும். சோழராதிக்கம் பெற்றது பிற்காலத்தே யாகும்.

இவையன்றிபட்டினத்தடிகள்பாடல் பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்பட அவரது சீடராகக் கருதப்படும் சேந்தனார் பாடல் திருவிசைப் பாவிலுள் அடங்கியுளது. ஆகவே நன்மதி யமைச்சர்சேந்தன் வேறு; திருவிசைப் பாச் சேந்தன் வேறவர்.

இனி, ஒருசாரார் சேந்தனாரும் திருமாளிகைத்தேவரும் ஒருவரே யென்பர். அவர் கொள்கைக்கு ஆதாரம் திருவீழி மிழலையில் காணப்படும் கல்வெட்டொன்றில் சிவஞானி சேந்தன் வைத்த திருநுந்தா விளக்கு ஒன்று. என்று வடமொழியிலும் அதன் கீழ் 'திருமாளிகைத் தேவர் வைத்த திரு

வந்தா விளக்கு' என்று தமிழிலும் காணப்படுவதேயாம்.

இக்கல்வெட்டை வெளியிட்டகோபிநாதராயரவர்களே இக்கல் வெட்டின் எழுத்தினால் இஃது இரண்டாவது முறையாக முன்னொருமுறை பொறிக்கப்பட்ட கல்வெட்டைப் பார்த்து வெட்டப்பட்டது என ஊகிக்கின்றார்கள். பல கல்வெட்டுக்களைச் சேர்த்து எழுதுவது முண்டு. ஆகையால் இக்கூற்று நிலவாது.

இஃதன்றி திருமாளிகைத் தேவர் திருவாவடுதுறையிலே வாழ்ந்த பெரியாரென்பர். இவரும் சேந்தனாரும் ஒருவராயின் கன்ன பரம்பரை இச்செய்தியை நழுவவிட்டிராது. ஆகவே இவ்விருவரும் வேறாவர் என்பது நிலைபெறும். இதுகாறும் கூறியதுகொண்டு திருவிசைப்பாபாடிய சேந்தனார் வேறாவர் என்பது தெளிவு.

### பிறந்தஊர்

பட்டினத்தடிகள் நன்மதி யமைச்சர் சேந்தனார் ஊர் நாங்கூராகவே, இவரது ஊர் எதுவென ஆராய்வோம். இவரது திருப்பாடல்களில் யாதொரு ஆதாரமுங்காண்பதற்கில்லை. தில்லையில் வாழ்ந்தாரென்றும், சிறிதுகாலம் திருவிடைக்கழி என்ற திருப்பதியிற் றங்கியவரென்றும் அறியக்கிடக்கின்றதேயன்றி வேறு புலன் கிடைக்கவில்லை. எனினும் திருவீழி மிழலைப் பழைய கல்வெட்டொன்று 'இவ்வூர்க் கவுணியன் ஏறஞ்சேர்ந்தன் பக்கல் கொண்ட காசு உ௦கூ இருபத்தாறு காசுங்கொண்டோம்; மேலும் ஸ்ரீ கோயில் பெற்றுடையார் எரிக்க கடவாராக; இப்பரிசு இசைந்து கல்லில் வெட்டுவித்தோம் இவ்வனைவோம். ஜயந்தோ ஸ்ரீ சிவஞானி தீபம் ஸூசந்த்ரார்க்கம் அதிஷ்டபேத்....' என்று காணப்படுகிறது. சிவஞானியென்றும் சேந்தனென்றும் காணப்படுவதுகொண்டு இவர் திருவீழிமிழலையிற் பிறந்தவரோ என ஐயுறுகின்றனர். அதற்கு இதுபோதிய ஆதாரமாகாது. எனினும் முற்காலத்தில் சேந்தனார் அவ்வூரினராயிருந்து அவரது நினைவுக் குறியாக ஒரு மடம் ஏற்பட அம்மடத்துக்குத் தலைவராயினாரெல்லாம் அப்பெயரே கொண்டு வாழ்தல் இயற்கை. இக்கல்வெட்டு அம்மடாதிபதிகளில் பின் வந்தாரொருவர் வைத்ததாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும் வேறு ஆதாரம் கிடைக்கும் வரை சேந்தனார் திருவீழி மிழலையினர் என்று கொள்வதில் யாதொரு குற்றமுமில்லை.

### சேந்தனாரைப்பற்றிய கதைகள்

சேந்தனார் இருவராகப் பிரிக்கப்பட்டதன் காரணமாக இருவரையுஞ் சேர்த்து ஒருவராகக்கொண்டு ஏற்பட்டு வழங்கும் கதைகள் பல. சேந்தனார் வரலாறெழுதிய ஒரு ஆசிரியர் சேந்தனார் தமதாசிரியர் கட்டளைப்படி தில்லைப்பதி சென்று பக்கத்திலுள்ள காடுகளில் விறகு வெட்டி விற்று அதனால்வரும் ஊதியத்திலிருந்து ஒருஅடியாருக்கு அன்னமிட்டுவாழ்ந்துவருகையில் ஒரு மார்கழித் திருவாதிரையில் அடியாரகப்படாது வருந்த சிவபெருமானே அடியாராக வந்து அவரிட்டகளியமுதையுண்டு சென்றனரென்பர். திருவெண்காடுடையார் புராண ஆசிரியர் சேந்தனார் பட்டினத்தடிகள் கட்டளைப்படி காட்டில் விறகு வெட்டி விற்றுவருநாளில் ஒருநாள் விறகுவெட்டச் சென்றபோது தான் கொண்டு சென்ற கட்டமுதை ஒரு மரக்கிளையில்



கட்டித் தூக்கியிருக்க அம்மூட்டை கிழிந்து அன்னம் பிதிர்ந்து விழ அவ்வன்னம் சிவபிரானுக்கே யாகுகவென்றதாகவும் அதனை வெளிப் படுத்த வெண்ணி, சிவபெருமான் ஒரு சோழனுடைய பூசை முடிவில் கூத்தப்பெம்மானது திருச்சிலம்பொலி கேட்காமலிருக்கச் செய்து அன்றிரவு அவனது சொப்பனத்தில்தான் சேந்தனது உணவருந்தச் சென்றதாகச் சொன்னாரென்பர், இதற்கு மேற்கோளாக.

“அவிழ்ந்த துணியி லவிழ்ந்த வவிழை
யவிழ்ந்த மனத்தா லவிழ்க்க - அவிழ்ந்தசடை
வேந்தனாற் கின்னமுத மாயிற்றே மெய்யன்
சேந்தனார் செய்த செயல்” [பிற்

என்று திருக்களிற்றுப்படியார் செய்யுள் நிற்கிறது. ஆகவே பட்டினத்தடிகள் சேந்தனாரைப்பற்றிய கதையாக வேயிருத்தல் கூடும்.

திருவிசைப்பாச் சேந்தனார் நாளடைவில் தலங்கடோறும் சென்று ஆண்டாண்டுள்ள திருக்கோயில்களையும் அடியாரையும் வணங்கி முடிவில் தில்லை மூதூரடைந்து வாழ்ந்து வந்திருத்தல் அமைவுடையதே. அங்கு வாழ்ந்து வருகையில் திருவிழாவின் போது திருத்தேர் செல்லாதிருப்பதைக் கண்ட பெரியார் பல்லாண்டு பாடி திருத்தேரை நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தினாரென்ப. மறு நாள் திருவாதிரைத் திருவிழா வாகலின் அன்று 'திருவாதிரை யொருவாக்களி' படைத்தல் மரபாகலின் அதன்படியே யன்பரும் கூத்துகந்த பெம்மானுக்கு நிவேதிக்க, அன்பர் மனமே கோயிலாக் கொண்ட பெம்மான் உவந்தேற்றான். அதனோடு நில்லாது மெய்யடியாராகக் கருதப்படும் தில்லை மூவாயிரவர்க்கும் வெளியிட்டதாகக் கன்ன பரம்பரை கூறும். இவ்வாறிருந்து சேந்தனார் எம்பெருமானது திருவடி நீழலெய்தினார்.

### இவரது பாக்கள்

சேந்தனார் பாடியனவாக நமக்குக் கிடைப்பவை மூன்று திருவிசைப்பா பதிகங்களும் ஒரு பல்லாண்டுப் பதிகமுமே யாம் 'திருவீழி மிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி இம்மூன்று திருப்பதிகளின் மேல் திருவிசைப்பாவும் கோயிலான தில்லைப்பதியின் மேல் திருப்பல்லாண்டும்பாடியுள்ளார். சைவர்கள் பாராயணத்தில் திருப்பல்லாண்டுச் செய்யுள் பாராயணம் செய்வதே இவரது பாடற்பெருமை பக்திப் பெருமைக்கும் போதிய சான்றாம். அதனிலும் 'பாலுக்குப் பாலகன்' என்ற திருப்பாடலே அதிகமாகப் பயில்வது, 'குழலொலியாழொலி' என்பது அடுத்தபடியாக வழங்குவது, இச்செய்யுள்களெல்லாம் செம்பாகமாக அமைந்திருப்பதோடு கேட்போர் மனதைக் கரைக்கும் வன்மையுடையன. திருவிசைப் பாவிலோ திருவாவடுதுறைப்பதிகமும் திருவிடைக் கழிப் பதிகத்துள் பெரும்பாலனவும் நாயக நாயகி பாவத்துளமைந்தன. முழுவதும் படித்து ஆனந்தமுறக் கூடியனவென்பதன்றி வேறு யாது கூறத்தக்கது.

“மானேர் கலைவளையுங் கவர்ந்துளங்
கொள்ளை கொள்ள வழக்குண்டே
தேனே யமுதே யென்சித்தமே
சிவலோக நாயகச் செல்வமே
யானே யலம்பு புனற் பொன்னி
யணியா வடுதுறையன் பர் தங்
கோனே நின்மெய்யடியார் மனக்கருத்தை
முடித்திடுங் குன்றமே”

# அறுபத்துமூவர்

[அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.]

திருத்தொண்டத்தொகையில் கூறப்பெற்றவர்கள் தனி அடியார்கள் அறுபத்து மூவரும் தொகை அடியார்கள் ஒன்பதின்மரும் சேர்ந்து எழுபத்திரண்டுபேர் ஆவர். திருத்தொண்டர்களின் சரித்திரங்கள் சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த பெரிய புராணத்தில் விளக்கப்பட்டுள்ளன. அவர்கள் விபூதி உருத்திராக்கமாகிய சிவவேடம் தாங்கினவர்கள். புனிதமான உள்ளத்தை உடையவர்கள். பஞ்ச பூதங்கள் தம் நிலையிற் கலங்கினாலும் சிவபெருமான் திருவடியை மறவாத சிந்தையை யுடையவர்கள். சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்தும் பேரன்புவாய்ந்தவர்கள். எப்போதும் சிவபெருமானை நினைந்து நினைந்து மனம் உருகி, மயிர்ப்புளகம் உண்டாக ஆனந்தக் கண்ணீர் சொரியும் தன்மை உடையவர்கள். விருப்பு வெறுப்பு அற்றவர்கள். ஓடும் செம்பொன்னும் சமமாகப் பாவிக்கும் தன்மையுள்ளவர்கள். நான் எனது என்னும் செருக்கு அற்று, தங்களுக்கென ஒரு செயலுமில்லாமல் சிவபெருமான் திருவருளின் வழி நிற்பவர்கள். இவர்கள் பல குலங்களில் தோன்றி சிவபெருமானிடத்தும் சிவனடியார்களிடத்தும் பலவித திருத் தொண்டுகள் செய்து எப்படிப்பட்ட இடையூறுகள் நேரிட்டபோதினும் மனம் சலிக்காமல் அத்திருத் தொண்டுகட்காகத் தம் உயிரையும் மனைவிமக்கள் முதலியோரையும் விட்டுவிடத்தக்க மனோதிடம் கொண்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் இல்லறத்தில் இருந்துகொண்டு மனைவி மக்களோடு வாழ்ந்து வந்தும், தம் மனைவி மக்களிடம்கொண்ட அன்பைக் காட்டிலும் அநேகமடங்குஅன்பு சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்தும் பூண்டவர்கள்.

187/54

அறுபத்து மூன்று நாயன்மார் சரிதங்களினின்று தெரிந்து கொள்ளக் கூடிய விஷயங்களாவன:

1. இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் இன்பமானது சிறிய இன்பம், துன்பம் கலந்தது; நிலைத்திராதது. இந்த இன்பமானது உலகப் பொருள்கள் சம்பந்தமாக வருவது. இதைத் தவிர கடவுள் சம்பந்தமாக வரும் இன்பம் ஒன்று இருக்கிறது. அது பேரின்பம், துன்பம் கலவாதது, என்றும் நிலையாயிருப்பது. இந்த இன்பம் அடைந்தோர்க்கு பிறப்பு இறப்பு இல்லை.

2. இந்த பேரின்பத்தை அடையும் வழி இன்னதென்று தெரிந்துகொள்ளலாம். நிலையில்லாத உலகப் பொருள்களாகிய பெண், புதல்வர், பொன், பூமி, புகழ் இவைகள் மீதுள்ள ஆசையைக் குறைத்துக் கடவுள் மீது அன்பைச் செலுத்தவேண்டும். இந்த அன்பு மேலிட மேலிட துன்பம் குறைந்து இன்பம் அதிகரிக்கும்.

3. எந்தக் குலத்தவரா யிருந்தாலும் கடவுளிடத்து உண்மையான அன்பு உடையவராய் அவரவருக்குத் தக்க திருத்தொண்டை மேற்கொண்டு ஒழுகினால் அவர் அருளைப் பெற்று முத்தி அடையலாம்.

4. கடவுளிடத்து மெய்யன்பு உண்டாக வேண்டுமானால்,

(1) அநாதியாக ஒவ்வோர் உயிருடன்கூட இருந்து நன்மையைச்செய்து வரும் கடவுளே நமக்கு உண்மையான உறவினரென்றும் மற்றைய உறவினரெல்லாம் உண்மையான உறவினர் அல்லர் என்றும் உணரவேண்டும்.

(2 உலகில் நமக்கு நேரிடும் துன்பமெல்லாம் நமக்கு உலகப் பொருள்களில் இருக்கும் பற்றை நீக்கிக் கடவுளின் திருவருள் வழி நிற்பதற்காகக் கடவுளின் கருணையினால் கொடுக்கப்பட்டதென்று எண்ணவேண்டும்.

(3) சில வேளைகளில் பாபிகள் இன்பம் அனுபவிப்பது போலவும், புண்ணிய சீலர்கள் துன்பம் அனுபவிப்பது போலவும் காணப்படினும், அதனால் மனம் தளர்ச்சி அடையாமல் கடவுள் நமக்குக் கொடுக்கும் இன்ப துன்பங்கள் எல்லாம் நம்முடைய நன்மைக்கே கொடுக்கிறார் என்று அவரிடத்து முழு நம்பிக்கை [illegible]

சைவ சித்தாந்த மகா சமாஜத்தில் விற்பனைக்குரிய

## புத்தகங்களின் அட்டவணை

| | ரூ. | அ. |
|---|---|---|
| "சித்தாந்தம்" பைண்டு பிரதி (மலர் க, உ, ௩ தனித்தனி) | 2 | 0 |
| அப்பர் தேவாரம் (கலிக்கோ) ... ... ... | 0 | 12 |
| ஷை (ராப்பர்) ... ... ... | 0 | 10 |
| சுந்தரர் தேவாரம் ராப்பர் ... ... ... | 0 | 4 |
| உமாபதிசிவம் திருமுறைத்திரட்டு ... ... ... | 0 | 2 |
| இயற்கைத் தத்துவநூலும் சைவசமயமும் ... ... | 0 | 2 |
| புலால் மறுத்தலுக்கு 50 காரணங்கள் ... ... | 0 | 2 |
| அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திரவுண்மை ... | 0 | 4 |
| சைவர் மகாநாடு, திருப்பாதிரிப்புலியூர் ... ... | 0 | 8 |
| திருவெம்பாவைக் கருத்து ... ... ... | 0 | 2 |
| மரணத்தின் தன்மை ... ... ... ... | 0 | 2 |
| சைவமும் சுயமரியாதையும் ... ... ... | 0 | 2 |
| வேட்டுவனும் அப்புமு ... ... ... ... | 0 | 2 |
| திருவிழாவின் அர்த்தம் (பத்து பிரதிகள்) ... ... | 0 | 2 |
| அறுபத்துமூவர் விளக்கம் ... ஷை ... ... | 0 | 2 |
| மகிழடிசேவை விளக்கம் ... ஷை ... ... | 0 | 2 |
| தேவாரம் விளக்கம் ... ... ஷை ... ... | 0 | 2 |
| சமயகுரவர் சம்பாஷணை ... ஷை ... ... | 0 | 2 |

தபாற்கூலி, பார்சல் செலவு, ரிஜிஸ்தர் செலவு முதலியன வேறு.

இங்ஙனம்:

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை, 10-5-1931.

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.
சைவசித்தாந்த மகா சமாஜம்.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 5.

# ஏல விற்பனை அறிக்கை

சைவ சித்தாந்த மகா சமாஜத்தினரால் வெளியிடப்பட்ட சுந்தரர் தேவாரம் ராப்பர் பிரதிகள் 1800 வரையிலும், அப்பர் தேவாரம் ராப்பர் பிரதிகள் ஆயிரம் வரையிலும் ஆகிய இவைகள் சென்னை, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு 150-வது எண்ணுள்ள இல்லத்தில் 1931௵ ஜூலை௴ 26௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்குப் பகிரங்க ஏலத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி சமாஜ நிர்வாக சபையினரால் விற்றுமுதல் செய்யப்படும்.

## நிபந்தனைகள்

1. நூறு பிரதிகள் ஒவ்வொரு கூறுக (each lot, one hundred copies) விற்கப்படும்.

2. ஏலத்தில் ஒரு கூறையோ, பல கூறுகளையோ எடுப்பவர்கள் ஏலம் முடிந்தவுடன் பாதிவிலையைச் சமாஜக் காரியதரிசியிடம் செலுத்திவிட வேண்டும். மற்றைய பாதியை ஏலம் முடிந்த மூன்றுநாளைக்குள் செலுத்திவிடவேண்டும். விலை முழுமையும் செலுத்தியவுடன் தாங்கள் ஏலங்கூறி யெடுத்த புத்தகக் கூறுகளை எடுத்துக்கொண்டு செல்லவேண்டும்.

3. மேற்கண்ட நிபந்தனையின்படி பணம்கட்டத் தவறினால், தவறியவர்களின் பொறுப்பில் சமாஜக் காரியதரிசியால் மறுஏலம் விடப்படும். மறு ஏலத்தில் முன் ஏலத்தைவிடக் குறைந்தவிலைக்குப் போனால் விலைக்குறைவு, ஏலச் செலவு முதலியவைகட்கு, தவறியவர் ஜவாப்தாரி யாவார்.

4. சமாஜக் காரியதரிசி முதலிய நிர்வாக சபையினரும், ஏனைய சமாஜ அங்கத்தினரும், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட எவரும் ஏலத்தில் விலைகூறவும் கூறுகளை எடுக்கவும் உரிமையுடையவர்களாவர்.

5. சென்னைமாநகரத்துக்குப் புறம்பேயுள்ள சமாஜ அங்கத்தினர் எவரேனும் தபால் மூலம் ஷை ஏலத்தில் கலந்துகொள்ள விரும்பினால் கீழ்வரும் முறையை அனுசரிக்கவேண்டும். தாங்கள் எடுக்க எண்ணுகின்ற கூறு எது, எந்த விலை வரையில் ஏலத்தில் கேட்கலாம் என்பவற்றையும், இதற்காக மட்டும் காரியதரிசிக்கு அதிகாரம் தருகிற செய்தியையும் ரிஜிஸ்தர் தபால் மூலம் காரியதரிசிக்கு ஜூன்௴ 30௳க்குள் தெரிவித்து ஏலம் எடுத்தவுடன் கட்டவேண்டியதற்காகப் பாதி தொகையையும் ஜூன்௴ 30௳க்குள் காரியதரிசிக்குக் கிடைக்கும்படி மணியார்டர் மூலம் (இன்ஷூர் மூலம் கூடாது) அனுப்பவேண்டும். புத்தகங்கள் ஷை அங்கத்தினர் கூறியுள்ள விலையளவில் ஏலத்தில் எடுக்கப்பட்டால் அவை ரயில்வே மூலமாகவோ தபால் மூலமாகவோ அவ்வங்கத்தினர் முழுச்செலவில் அனுப்பிவைக்கப்படும். இவைகட்குரிய தபால் செலவு, தந்தி செலவு, பார்சல் செலவு, ரயில் செலவு முதலிய எல்லாச் செலவுகளையும் அவ்வங்கத்தினர் ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறு உபகாரம் புரிவதற்காக சமாஜத்துக்காவது, காரியதரிசிக்காவது எவ்வித கமிஷன் முதலிய கட்டணங்களும் செலுத்தவேண்டியதில்லை.

6. மேற்கண்டவைகளைத் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் சாதாரணமாக ஜங்கம சொத்து ஏலத்தைப் பற்றிய விதிகளும் நிபந்தனைகளும் இந்த ஏலத்திலும் அனுசரிக்கப்படும்.

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை, 10-5-1931.

இங்ஙனம்:
ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.